# கண்ணன

ழந்தைகளின் பத்திரிகை



844
2-56

-2-

# செய்திகள்

## நேரு மாமா

பீஜப்பூரில் ஒரு பெரிய குழந்தைகள் கூட்டம் நடை பெற்றது. 5000 குழந்தைகளுக்குமேல் கூடி இசை, நடனம், விளையாட்டு முதலிய கேளிக்கைகள் செய்து காட்டினார்கள். நேரு மாமாவுக்கு ஒரே மகிழ்ச்சி. அவர் என்ன சொன்னார் தெரியுமா? ''நீங்கள் எல்லாரும் இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்களைப் பின்பற்றாதீர்கள். இவர்களிடத்திலே ஜாதி வெறி, மொழி வெறி எல்லாம் இருக்கின்றன. உங்கள் தலைமுறைதான் சிறந்ததாக இருக்கப் போகிறது. நீங்கள்தான் இந்த நாட்டை நாளைக்குப் பெரியவர்களாக வளர்ந்து ஆளப்போகிறீர்கள். நீங்கள் ராஜ்ய வேற்றுமை, மொழி வேற்றுமை, ஜாதி வேற்றுமை ஒன்றையும் பாராட்டாதீர்கள். எல்லா வேற்றுமைகளையும் கிட்டே வர விடாமல் விரட்டியடியுங்கள். ஒற்றுமையாக இருங்கள். அன்பாக இருங்கள். ஒன்றாக இருங்கள்'' என்று கூறினார் நேரு. அவர் இப்படிச் சொன்னது, பீஜப்பூர் குழந்தைகளுக்கு மட்டுமல்ல; எல்லாக் குழந்தைகளுக்கும் தான், இல்லையா?

## குழந்தை எழுத்தாளர் சங்கம்

குழந்தை எழுத்தாளர் சங்க அங்கத்தினர்களுக்கு ஏப்ரல் 16-ஆம் தேதி மாலை 6-மணிக்கு ''லிட்டில் தியேட்ட''ரில் (மவுண்ட் ரோடு அடிஸன் கம்பெனி மாடி) படக்காட்சி ஒன்று காட்டப்படும். ஆண்டுப் பேரவை 29-ஆம் தேதி மாலை சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

## ஆதிகால மனிதர்கள்

மைசூர் ராஜ்யத்தில் தும்கூர் என்று ஒரு ஜில்லா. அந்த ஜில்லாவில் பனசந்திரா மலைப் பகுதியில் மிகப் பழங்காலத்து மனிதர்கள் உபயோகித்த கருவிகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் ஐம்பதாயிரம் அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதிகால மனிதர்கள் உபயோகித்த கருவிகள் என்று புதை பொருள் இலாகா அதிகாரி கூறுகிறார். அந்தக் கருவிகள் கூழாங்கற்களில் செய்யப்பட்டிருக்கின்றன.

## திருவள்ளுவர் திருவிழா

கொழும்பு (இலங்கை) தமிழ் மறைக் கழகம் சென்ற மூன்று ஆண்டுகளாக, திருவள்ளுவர் திருநாளைத் தமிழ் மக்கள் அனைவரும் சிறப்பான முறையில் கொண்டாட வேண்டும் என்று கூறி வருகிறது. இந்த ஆண்டு வள்ளுவர் திருநாள் மே மாதம் 24-ஆம் தேதி வியாழக்கிழமை அன்று வருகிறது. பாலர்களும் பள்ளி மாணவ மாணவியரும் இந்த நாளில் வழக்கம்போல் சிறப்பான முறையில் கலந்துகொண்டு திருநாளைப் பெருநாளாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

## தமிழ் நூல்கள் பரிசளிப்பு விழா

ஒவ்வோர் ஆண்டும் தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களுக்குச் சென்னைச் சர்க்கார் ரூ. 500 வீதம் பரிசு அளிக்கிறார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகம் அந்தப் பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கிறது. கவிதை, விஞ்ஞானம், இலக்கிய விமரிசனம், சிறு கதை, வைத்தியம், சமயம் முதலிய துறைகளில் வெளிவந்துள்ள 6 நூல்களுக்கு இந்த ஆண்டில் பரிசுகள் வழங்கினார்கள். பரிசு பெற்ற நூல்களில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய நூலும் ஒன்று. அவருடைய பரிசு அவர் குடும்பத்தாருக்கு அனுப்பப்பட்டது. மற்றொன்று கண்ணன் ஆசிரியர் 'ஆர்வி' எழுதிய சிறுகதைத் தொகுதி. மற்றும் ஸ்ரீ அ.ச. ஞானசம்பந்தன், ஆர். வீரபத்திரன், பு. ரா. புருஷோத்தம நாயுடு, டாக்டர் திரிபுரசுந்தரி ஆகிய நால்வருடைய நூல்களும் பரிசுகள் பெற்றன.

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 8

15 - 4 - '56

| | |
|---|---|
| குழந்தைகளே! பக்கம் | 2 |
| துன்முகியும் பிறந்ததம்மா! | 3 |
| ரேடியோ விமரிசனம் .. | 4 |
| மஞ்சள் பங்களா .. | 5 |
| டில்லி பாட்சாக் கதை .. | 10 |
| சாந்தாவின் சபதம் .. | 13 |
| முதலுக்கே மோசம் .. | 17 |
| ஸி. ஐ. டி. சிங்காரம் .. | 22 |
| கண்ணன் அங்கத்தினர்கள் | 27 |
| சோழனைக் காத்த மோசியார் .. | 29 |
| யானைக்குட்டிச் சவாரி .. | 33 |
| புலிக்குட்டி .. | 37 |
| கவியரங்கம் .. | 40 |

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ண

செய்திகள் - 2 - அட்டை.
பேனா நண்பர்கள் - 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## அருமையான சம்பவம்!

வண்டி புறப்படும் வேளை நெருங்கியது. கடைசிப் பெட்டியில் உல்லாசப் பிரயாணம் செல்லும் நாங்கள் (பள்ளி மாணவர்கள்) நிரம்பியிருந்தோம்.

"அவசர காரியமாக வெளியூருக்கு இந்த வண்டியில் போக வேண்டும். கொஞ்சம் இடம் கொடுங்கள்" என்றார் ஒருவர்.

"அப்படி என்ன ஸார், அவசர காரியம்?" என்றான் ஒரு மாணவன்.

"என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? நான்தான் சிறுவர்கள் வாரப் பத்திரிகையான 'பாலர்' ஆசிரியர். அடுத்த ஊரில் சிறுவர்கள் விழாவில் பேசப் போகவேண்டும். என் புனை பெயர்தான் 'சுறுசுறுப்பு'. என் கதைகளை நீங்கள்கூடப் படித்திருப்பீர்களே" என்றார்.

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டோம்.

இதற்குள் கடைசி மணியும் அடித்துவிட்டது.

அவர் உள்ளே ஏறி வந்தார். ஒரு மாணவன் எழுந்து இடம் விட்டான்.

அடுத்த ஸ்டேஷன் வரும்வரை தம் வீரப்பிரதாபங்களை அளந்து கொண்டே வந்தார். அடுத்த ஸ்டேஷன் வந்ததும், "ஒரு சிறுவர் பத்திரிகையின் ஆசிரியரைப் பார்த்த மகிழ்ச்சி உங்களுக்கு உண்டாகிறதல்லவா?" என்று கேட்டுவிட்டுக் கீழே இறங்கினார்.

"உங்களைப் பார்த்ததில் எங்களுக்கு வருத்தம்தான்" என்றேன்.

"ஏன்?" என்று கேட்டார் அவர்.

"அதோ மூலையில் உட்கார்ந்து இருக்கிறாரே, அவர்தான் எங்கள் பள்ளித் தமிழ் ஆசிரியர். அவர்தான் 'பாலர்' பத்திரிகையின் ஆசிரியரும். 'சுறுசுறுப்பு' என்ற புனைபெயரில் வாரவாரம் எழுதி வருகிறார். இந்தக் காலத்து மாணவர்கள் எவ்வளவோ விஷயம் தெரிந்தவர்கள். எங்களை ஏமாற்ற முடியாது" என்று சொல்லி முடித்தேன் நான்.

முகத்தில் அசடு வழியப் பேசாமல் சென்றுவிட்டார் அவர்.

—நா. சுப்பிரமணியன், கடலூர். N.T.

# குழந்தைகளே!

கண்ணனுடைய புது வருஷ வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள். பரீட்சை எழுதினவர்களுக்கும் சரி, எழுத இருப்பவர்களுக்கும் சரி, கண்ணனுடைய இதயங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள் கிறேன். நீங்கள் பரீட்சையில் மிக மிக நன்ருக எழுதி, மேல் வகுப்புக்கு மதிப்போடு போகவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஆயிற்று; பரீட்சை முடிந்ததும் கோடை விடுமுறை. அந்த நீண்ட விடுமுறையை நினைத்தே பரீட்சையின் கடுமையைக்கூட நீங்கள் சற்று மறந்திருப்பீர்கள். ஆனுல் எனக்குத்தான் உங்களுக்கு விடுமுறை என்று வந்தால் கொஞ்சம் யோசனையாக இருப்பது வழக்கம். இப்போது, எழுதாத விஷயங்களைச் சேர்த்து வைத்து ஒரு முட்டாக அனுப்பிவிடுவீர் கள். அவ்வளவையும் உடனுக்குடனே படிக்கவேண்டும். முடிவு செய்ய வேண்டும். பதில் எழுத வேண்டும். இல்லையோ, போச்சு மோசம்! தபால்காரன் மூட்டையைத் தூக்க மாட்டாமல் தூக்கி வந்து தலையில் போடுவதுபோல என் மேஜைமேல் போடுவான். அப்புறம் நான் இருக்கும் இடமே தெரியாது. தபால் மலைக்குள் கிடப்பேன்.

இருந்தாலும் அப்படியெல்லாம் இருப்பதில்தான் எனக்கு விருப்பம் அதிகம். என்னைச் சரியானபடி வேலை வாங்கக்கூடியவர்கள் நீங்கள்தான். சரியானபடி வேலை வாங்கக்கூடிய எஜமானனிடம்தான் வேலை செய்கிற வனுக்குக்கூட ஒரு மதிப்பு இருக்கும். அப்படித்தான் உங்களிடமும் எனக்கு நல்ல மதிப்பு. குழந்தைகள் பத்திரிகைகள் என்ருல் மிக லேசு என்று பல பேர் எண்ணுகிருர்கள். என்னிடமேகூடக் கேட்டிருக் கிருர்கள். ஆனுல் பெரியவர்களுக்கான பத்திரிகைகளைவிடக் குழந்தைப் பத்திரிகைகள் நடத்துவதுதான் ரொம்பக் கஷ்டம். தபால் இலாகாவில் போய்க் கேட்டுப் பார்க்கச் சொல்லுங்கள், லாபம் யாரால் என்று. விசாரித்தால் அப்போது உண்மை தெரியும். தபால் இலாகா கிடக்கட் டும்; குழந்தைகளுக்கு எழுதுவது என்ருல் லேசா? குழந்தைகளுக்குப் பதில் சொல்வது என்பது லேசா? அவர்கள் எல்லாருக்கும் பிடிக்கும்படி ஒரு காரியத்தைச் செய்வது என்பதுதான் லேசா? சுமார் நாற்பது குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒரு வகுப்பைச் சமாளிப்பது என்பதே ரொம்பச் சிரமமான காரியம். குழந்தைப் பத்திரிகைகள் என்ருல் எல்லா ஊரிலும் உள்ள எல்லாப் பள்ளிக்கூட மாணவ மாணவிகளையும் திருப்திப் படுத்தவேண்டும். பெரியவர்களைவிடக் குழந்தைகளுக்குப் புத்தி துறுதுறு வென்று இருக்கும். பெரியவர்களுக்குத் தெரியாததையெல்லாம் கேட் பார்கள். அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் சொல்லி, அவர்கள் அன்புக்குப் பாத்திரமாகவேண்டும்.

சும்மாவாவது ஒரு பையன், ''டேய், அந்தப் பத்திரிகையிலே பிசாசுக் கதையே இல்லை; அது சுத்த மட்டம்டோய்!'' என்பான்.

உடனே பத்துப் பேர் சேர்ந்துகொண்டு, ''ஆமாண்டோய்!'' என்று கத்துவார்கள். யாரும் அவன் சொல்வது சரியா, தப்பா என்று யோசித் துப் பார்த்தால்தானே? மாட்டார்கள்.

ஆனுல் கண்ணன் படிப்பவர்கள் மேலே சொன்னபடி ஆமாம் போடு கிற வகையைச் சேர்ந்தவர்கள் அல்ல. கண்ணன் படிப்பவர்கள் எண் ணிக்கை வர வர அதிகமாவதிலிருந்து ஆமாம் போடுபவர்கள் குறைந்து வருகிருர்கள் என்றே எண்ணுகிறேன்.

நல்ல பத்திரிகை என்றும், சிறந்த புது விஷயங்கள் வருகின்றன என்றும் உங்கள் பாராட்டைப் பெறவேண்டாமா? அதற்குத்தான் கண்ணன் பாடுபடுகிருன். அடுத்த இதழில் உங்கள் விடுமுறைக்கான பொழுது போக்குப் போட்டி ஒன்றைப்பற்றி அறிவிக்க விரும்புகிறேன்.

ஆசிரியர்

# துன்முகியும் பிறந்ததம்மா!

என். எஸ். சிதம்பரம்



நன்மையெல்லாம் தருகின்ற
நல்லதொரு புத்தாண்டாம்

துன்முகியும் பிறந்ததம்மா!
துலக்கமிக நிறைந்ததம்மா!

புதிதாகப் பூக்கின்ற
பூவைப்போல் துன்முகியாம்

புத்தாண்டும் மலர்ந்ததம்மா!
புதுமைமணம் வளர்ந்ததம்மா!

காலையிலே எழுகின்ற
கதிரைப்போல் துன்முகியும்

சீலமுடன் உதித்ததம்மா!
செழுமையினைப் பதித்ததம்மா!

தீங்குயிலின் வசந்தஇசை
திகழ்ந்தொளிரத் துன்முகியும்

பாங்குடனே வந்ததம்மா!
பண்ணின்பம் தந்ததம்மா!

நல்வாழ்வும் பல்வளமும்
நல்கிடவே துன்முகியும்

செல்வமுடன் தழைத்ததம்மா!
செந்தமிழும் செழித்ததம்மா!

கருத்தோங்கி மாந்தரெல்லாம்
களித்திடவே துன்முகியும்

விருப்புடனே சார்ந்ததம்மா!
வெகுநலன்கள் சேர்ந்ததம்மா!

அன்புடனே பிறந்திருக்கும்
அருமைமிகும் துன்முகியில்

இன்பமெலாம் விளைந்திடவே
இறைவனடி பணிந்திடுவோம்!



# ரேடியோ விமரிசனம்

## மணி மலர் (1-4-56)

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்ற பாட்டை, சிறுவர்-சிறுமியர்கள் பின்னணி இசையோடு பாடும்பொழுது "இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்பதை அனைவரும் அப்பொழுதே உணர்ந்தோம்.

'வாய் வீச்சு' என்ற நாடகம் அரிய நீதியைப் போதித்த போதிலும் வசனங்கள் சரிவர உச்சரிக்கப்படவில்லை. போதிய பயிற்சி கொடுத்திருந்தால் நாடகம் சோபித்திருக்கும்.

'பாசம்' என்னும் கதையை வானொலி அண்ணா அழகாகக் கூறினார். கதை பழங்காலக் கதையாக இருந்தாலும், வீண் ஆசையால் விளையும் துன்பத்தையும் பாசத்தின்-நட்பின் பெருமையையும் நமக்கு உணர்த்துகிறது.

சுகாதாரத்திற்காக அரசாங்கம் ஒதுக்க உத்தேசித்துள்ள தொகையையும் மேற்கொள்ளப் போகும் வேலையையும் பற்றி விரிவாக விளக்கினார் அண்ணா. இதேபோன்று ஒவ்வொரு வாரமும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளும் வேலைகள் ஒவ்வொன்றைப் பற்றி விளக்குவார் என எதிர்பார்க்கிறோம்.

நாமக்கல் கவிஞரின் நீதிமொழிப் பாடலைச் சிறுவர் - சிறுமியர்கள் மிகவும் இனிமையாகப் பாடி, நமது பாராட்டுதலைப் பெற்றுவிட்டார்கள்.

—கே. எஸ். சக்கரவர்த்தி.

## சிறுவர் நிகழ்ச்சி

**7-4-'56-**இல் சென்னை சிறுவர் ஒலிபரப்பு ராஜாஜி அவர்கள் கதையுடன் துவங்கியது. அவர் கூறிய கதையைப்பற்றி நாங்கள் விமரிசனம் செய்யத் தேவையில்லை! அடுத்தபடியாக, "எங்கும் படிப்பு" என்ற நாடகத்தில் கிட்டு, வாசு, ராமுவாக நடித்த மாணவர்கள் நடிப்பு நன்றாக இருந்தது. கதை பரவாயில்லை. பிறகு நடந்த "தேசிங்கு ராஜன்" நாடகம் நமக்குத் தெரிந்ததேயானாலும் தயாரித்தவர் முயற்சியால் புதிதாகத் தோன்றியது. தேசிங்காகவும் அவனுடைய தோழனாகவும் நடித்த மாணவர்கள் கதாபாத்திரங்களுடன் ஒன்றி விட்டார்கள் என்பது அவர்கள் நடிப்பின் மூலம் நன்றாகத் தெரிந்து விட்டது. அவர்களுக்கு நமது பாராட்டுகள். மொத்தத்தில் போன வாரத்தைக் காட்டிலும் இந்த வாரம் மிகவும் நன்றாக இருந்தது என்று தாராளமாகச் சொல்லலாம்.

—எம். குப்புசாமி.

## சிறுவர் நிகழ்ச்சி

சென்னையில் 7-4-56 அன்று நடைபெற்ற சிறுவர் நிகழ்ச்சியைச் சுமாரென்றே கூறலாம். ராஜாஜி கூறிய 'வரம் கேட்ட குதிரை' என்ற கதையின் நீதியை எப்படிப் பாராட்டுவது?

"எல்லாம் சதி" என்ற எஸ். ரங்கநாயகியின் நாடகம் விகடங்கள் அமையப்பெற்றது. ஆனால் அதில் பாட்டியாகவும் தாத்தாவாகவும் நடித்தவர்கள் வீரர்களைப்போல் பேசினர். தாத்தாவும் பாட்டியும் இப்படியா பேசுவார்கள்?

நித்தியானந்தம் "ராஜா தேசிங்கு" என்ற நாடகத்தை வீரம் மிக்க வசனங்களால் நிரப்பியிருக்கிறார். ஆனால் நடிகர்களில் சிலரது வார்த்தைகளில் சிறிது தயக்கம் காணப்பட்டது. மற்றப்படி நாடகம் நன்றாகவே இருந்தது.

—கே. ஹாரிஸ்பாபு, நெல்லை.

முதல் பரிசுபெற்ற தொடர்கதை:




மனோகரனுக்கு முதலில் ஒரு ஆள் குறுக்கே வந்ததும் இதென்ன சனியன் என்றுதான் தோன்றியது. உடனே பல ஆட்கள் ஓடி வந்ததைக் கண்டதும் ''சரி, இது சந்தானம் திட்டமிட்டுச் செய்த வேலை'' என்றுதான் நினைத்தான். ஆனால் அடுத்த கணமே சந்தானத்தையும் தாக்க ஆரம்பித்ததும் விஷயம் வேறு என்னவோ என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் அதற்குள் அவனையும் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். அவன் எந்த வழியைப் பற்றியும் யோசிப்பதற்கு முன் அவன் கை கால்களைக் கட்டி வாயிலும் துணியை அடைத்து, கண்ணையும் கட்டி ஒரு மூலையில் உருட்டித் தள்ளிவிட்டார்கள். கார் கொஞ்ச தூரம் சென்றதும் பிறகு நின்றது. அதிலிருந்த ஆட்கள் கீழே இறங்கி அவனையும் பலவந்தமாக வெளியே இழுத்து, கட்டிச் சுமந்துகொண்டு போனார்கள். கொஞ்ச நேரத்தில் மீண்டும் ஒரு வண்டியில் அவனைப் போட்டார்கள். வண்டி கடகடா வென்ற சத்தத்துடன் மேடு பள்ளங்களில் ஏறியும் இறங்கியும் குலுக்கிப் போட்டுக்கொண்டு சென்றது.

* * *

ராகவன் வேகமாக வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான். அவன் காதுகளில் ஹநுமந்தராவின் சொற்கள் அப்படியே ஒலித்துக் கொண்டிருந்தன. ''ராகவா! இனி மேல்தான் நீங்கள் - முக்கியமாக மனோகரன் - மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்த நிமிஷமும் எங்கிருந்தும் அவனுக்கு ஆபத்து வரக்கூடும். அதனால் அவனைத் தனியே விட்டுவிடாதே'' என்று எச்சரித்திருந்தார் அவர். அந்த எண்ணமே அவனை அவ்வளவு வேகமாக வீட்டுக்குத் துரத்திக் கொண்டிருந்தது.

ஆனால் திடீரென்று அவன் முன்னால் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஓர் ஆள் கீழே இறங்கி, ''ஸார்! ஸார்! உங்களைத்தான் மிஸ்டர்!'' என்று கை தட்டி அவனை அழைத்தான். சற்று நின்றான் ராகவன்.

''மஞ்சள் பங்களாவிலே வந்திருக்கிறாரே, புதுசா மனோகரன் - அவர் கூட்டாளிதானே நீங்க?'' ராகவன் ஒரு கணம் தயங்கினான். 'இதை இவன் ஏன் கேட்கிறான்? பதில் என்ன சொல்வது? இதை ஒப்புக் கொள்வதிலே என்ன தவறு?' இப்படி அவன் எண்ணங்கள் ஓடின.

''ஆமாம்'' என்றது அவன் வாய்.

''உங்கள் மனோகருக்கு ஆபத்து. உடனே உங்களைத் தேடி அழைத்து வரும்படி சந்தானம் சொன்னார். அவருடைய நண்பன்

நான். ஏதோ பல முரடர்கள் பங்களாவில் புகுந்து கலாட்டா செய்கிருர்களாம். உடனே உங்களைப் பத்திரமாக அழைத்து வரச் சொன்னுர். வருகிறீர்களா, நாங்கள் போகட்டுமா?''

அந்த ஆள் தன் கடமையைச் செய்துவிட்ட தோரணையில் நின்ருன். ராகவனுக்கு தலையில் பெரிய இடி விழுந்துவிட்ட மாதிரி இருந்தது. யோசிக்கும் திறனே அற்றுப்போய் அவன் 'வருகிறேன்' என்று ஒப்புக்கொண்டான்.

அடுத்த விநாடி அவன் காரின் பின் ஸீட்டில் இரண்டு தடியர்களுக்கிடையில் அமர்ந்திருந்தான். கார் விர்ரென்று மண்ணை வாரித் தூற்றிக்கொண்டே புறப்பட்டு விட்டது.

## 19

சில குறுக்குத் தெருக்களில் புகுந்து ஒரு பெரிய சாலையை அடைந்தது கார். பிறகு காற்று வேகத்தில் பறந்தது. இந்த வழி பூராவுமே புதிதுதான்.

''ஏன் டிரைவர், வழி தெரியவில்லையா? என்ருன் பதற்றமாக ராகவன்.

''எல்லாம் போக வேண்டிய இடத்துக்குத்தான் போகிருேம். சும்மாயிரு.'' டிரைவருக்குப் பக்கத்தில் இருந்த ஆள்தான் பதில் சொன்னுன். சொல்லிவிட்டு ஏதோ சைகை செய்தான். அவ்வளவு தான்; மின்னல் வேகத்தில் ஒரு துண்டு அவன் முகத்திலே விழுந்தது. பின்னுல் யாரோ அவனைக் கட்டினுர்கள் கைகளிரண்டும்கூடக் கட்டப்பட்டன. பிறகு இவ்வளவு என்று சொல்ல முடியாத நேரம் கார் ஓடிக்கொண்டே இருந்தது. பிறகு எங்கேயோ ஓரிடத்தில் இறக்கி ஓர் அறையில் கொண்டு தள்ளினுர்கள்.

கொஞ்ச நேரத்தில் அவன் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. அவன் கண்களை விழித்துப் பார்த்தான். ஒரு சிறிய அறைதான் அது. அதற்கு ஒரே கதவுதான். அதுவும் தாளிடப்பட் டிருந்தது. மேலே விளக்கு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. அறையின் நடுவே ஒரு மேஜையும் நாற்காலியும் இருந்தன. நாற்காலியில் நாகரிகமாக உடையணிந்த ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் எதிரே மேஜைமேல் வைக்கப்பட்டிருந்த கைத் துப்பாக்கி மின்சார விளக்கின் ஒளியில் பளபளத்தது.

அந்த மனிதர் ஒரு நிமிஷம் அவனை ஏற இறங்கப் பார்த்தார். ''தம்பீ! உயிர் மேலே ஆசை இருந்தால் மரியாதையாக நான் சொல்வதுபோல் நடந்துவிடு. இல்லையென்ருல்.. மேலே அவர் பேசவில்லை. அவர் கைத் துப்பாக்கியை அவன் மார்புக்கு நேராகப் பிடித்தார். ''நிச்சயமான பதிலைச் சொல்'' என்று அவர் கர்ஜித்தார்.

''என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள்'' என்ருன் ராகவன். ஏதோ சதி ஒன்றில் நன்ருகச் சிக்கிக்கொண்டுவிட்டோம் என்பதை நன்ருக உணர்ந்துகொண்டான். இனிமேல் அந்தச் சதியை நன்ருகத் தெரிந்துகொண்டு அதைத் தகர்க்கும் வழியைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற முடிவுக்கு அவன் ஏற்கனவே வந்திருந்தான். அதற்கு முதல் படியாக நல்லவனுக அதிகம் முரண்டு பிடிக்காதவன் போல நடித்து அவரை ஏமாற்ற வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

''நான் சொல்வதுபோல ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும்'' என்ருர் அவர்.

''யாருக்கு என்ன எழுத வேண்டும்?'' என்று சற்றும் தாமதமின்றிக் கேட்டான் ராகவன்.

''ஜமீன்தார் வீட்டில் ஆபத்து. 'உடனே புறப்பட்டு வா' என்று எழுதிக் கையெழுத்துப் போடு'' என்று உத்தரவிட்டார் அந்த மனிதர்.

ராகவன் தயங்கினுன். மனேகரைப் பிடிக்கவே இந்த முயற்சி. இதில் சந்தேகம் இல்லை. இதற்கு நான் உடந்தையாவதா? கூடவே கூடாது! ஆனுல் மறுத்தால் என்ன பயன்? வேறு வழியில் அவனைப் பிடிக்க முயற்சி செய்வார்கள். அதைத் தடுக்கவும் சக்தி இல்லாதவனுக ஆகிவிடுவான்; ஆகையால் அவர்கள் சொற்படியே



கடிதம் எழுதிவிட்டு அதிலேயே அவனுக்கு எச்சரிக்கையும் செய்துவிடவேண்டும்!

''என்ன தம்பி, யோசனை? சீக்கிரம்!'' என்று அவசரப்படுத்தினார் அவர்.

''சரி; காகிதம் கொண்டு வாருங்கள்'' என்று சொல்லி அதிலே சாதாரணமாகக் கவனிக்காதபடி மூலையிலே கிறுக்கல், முறையில் ''அபாயம்! வராதே'' என்றும் எழுதி அவரிடம் கொடுத்தான். அவர் அதை வாங்கி ஒரு முறை பார்த்துவிட்டு, ''சரி! இன்றிரவு மட்டும் நீ இங்கேதான் இருக்கவேண்டும். காலையில் வீட்டிற்குப் போகலாம்'' என்று எச்சரித்துவிட்டு வெளியே சென்றார். மறுகணம் அந்த அறையில் பயங்கர இருள் நிலவியது.

## 20

''டேய் பயலே! நெசத்தைச் சொன்னியோ பொளச்சே. இல்லாட்டித் தீர்த்துப்பிடுவேன் தீர்த்து. கழுத்தைத் திருகிக் காட்டிலே புதைச்சுப்பிடுவேன். அந்தப் படத்தை எடுத்தியா? எங்கே அது? மரியாதையாக் கொடுத்துடு'' என்று அதட்டினான் ஓர் ஆள். அத்துடன் தன் கையிலிருந்த சாட்டையைச் சுளீரென்று சொடுக்கினான். அந்த அடி மனோகரின் முதுகில் விழுந்தது. துடிதுடித்துப் போனான் அவன். தன்னைச் சுற்றி நின்ற முரடர்களை ஒரு முறை பயத்தோடு பார்த்தான். அவன் முதுகெல்லாம் சவுக்கடித் தழும்புகள் நிறைந்திருந்தன. அந்தப் பாழடைந்த இருட்டு இடத்தில் அவனைச் சுற்றிலும் இருந்த கரிய உருவங்கள் கரிய பூதங்களைப் போல அவனுக்குத் தோன்றின. மனோகரால் பொறுக்க முடியவில்லை. 'படத்தைக் கொடுப்பதால் என்ன வந்துவிடும்? கொடுத்துவிட வேண்டியதுதான்' என எண்ணினான்.

''என்னடா முழிக்கறே?'' என்று மீண்டும் சாட்டையைச்



சொடுக்கினான் அவன். ''ஐயா! உங்களுக்குப் படம்தானே வேண்டும்? அங்கே போனால்தான் என்னால் அதை எடுத்துக் கொடுக்க முடியும்.''

''ஏய்! திருட்டுப் பயலே! வீட்டுக்குப் போய் எங்களைப் பிடிக்க ஆள் தேடலாம்னு பார்க்கறே? முதுகை முறிச்சுப்பிடுவேன் முறிச்சு. படம் என் கைக்கு ஒரு ராத்திரிக்குள்ளே வந்துவிடணும். சாலையிலே இருக்குதே புளிய மரம், அதிலே பன்னிரண்டு மணிக்குள்ளே வைத்துவிடணும். படத்தை அப்படிச் செய்யாமே ஏதாவது உன் வேலைத்தனத்தைக் காட்டினியோ, ஒரு ஆள் பாக்கியில்லாமே கொளுத்திப்பிடுவோம் கொளுத்தி'' என்று முடிவாகச் சொல்லிவிட்டு நகர்ந்தான் அந்த ஆள்.

* * *

சந்தேகம் இல்லை. இந்த மனோகருக்கு நம்மேல் சந்தேகந்தான். இல்லை என்றால் அவன் இப்படி எல்லாம் நடந்துகொள்ள மாட்டான். யாரோ பெரிய கையாகப் பார்த்து உதவிக்குப் பிடித்திருக்கிறான். நம் விஷயத்தை அவர்கள் முழுவதும் கண்டு பிடித்துவிட்டார்கள். அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போயிருப்பார்கள். ஐயோ! ஜமீன்தார் பேர் வேறு இதிலே வெளியே வந்துவிடுமே. எப்படியாவது இதைத் தடுக்கவேண்டும். முதலில் அந்தப் பையனை விடுவித்துவிட்டால் பிறகு சமாளித்துக் கொள்ளலாம். முதலிலே அதைத்தான் செய்யவேண்டும் என்று கவலைப்பட்டார் சந்தானம். ஆனால் என்ன பயன்! அவர்தான் சாலையிலே மரத்தோடு மரமாகக் கட்டப்பட்டுக் கிடந்தாரே. நேரம் போய்க்கொண்டேயிருந்தது. அந்தச் சாலையிலே யாருமே போகவில்லை. வெகு நேரம் பொறுத்து வழியோடு சென்ற ஒரு பரதேசி அவரை விடுவித்தான். சந்தானம் பறந்து விழுந்துகொண்டு ஜமீன்தாரின் வீட்டுக்கு ஓடினார்.

'ஜமீன்தார்வாள்! மனோகரை நான் மெள்ளச் சரி செய்துவிட்டேன். அவனை அந்தக் கல்லைத் தேடி எடுத்துத் தருவதாகச் சொல்லிவிட்டான். ஆகையால் ராகவனை நீங்கள் உடனே என்னுடன் அனுப்பிவிடுங்கள். அவன் இனி இங்கே இருக்கவேண்டிய அவசியமில்லை'' என்றார் சந்தானம். சிறிது நேரத்தில் இருளைக் கிழித்துக்கொண்டு சென்ற காரில் உட்கார்ந்திருந்த ஐந்து பேர்களில் ராகவனும் இருந்தான்.

''ராகவா!''

''மனோ!''

உணர்ச்சி வேகத்தில் இருவருமே ஒரு நிமிஷம் மௌனமாக நின்றனர். உணர்ச்சி மிகுதியால் மனோகரின் உடல் நடுங்கிற்று.

''மனோகர்! ஏன் இந்தக் கோலம்? அந்தக் கடிதத்தைக் கண்டு ஏமாந்துவிட்டாயா? அங்கே போய் என்ன ஆபத்தில் சிக்கிக்கொண்டுவிட்டாயோ என்றுதான் ஒரே கவலையாக இருந்தேன். நல்ல வேளை! இங்கேயே இருக்கிறாயே.''

''இல்லை ராகவா! நல்லவேளை இல்லை. கெட்ட வேளைதான். எல்லாம் அப்புறம் சொல்கிறேன். இப்போது முதலில் அந்தப் படத்தைக் கொடுத்தாகவேண்டும், ராகவா! அதைச் சாலைப் புளிய மரத்திலே வைத்துவிட்டு வந்துவிட வேண்டும்'' என்றான் மனோகர் வருத்தத்துடன்.

''வருத்தப்படாதே மனோகர்! எப்படியும் ஆபத்துக்குத் துணிந்துவிட்டோம். இனி என்ன வந்தால்தான் என்ன? வா! கொண்டுபோய்

வைத்துவிட்டு வந்துவிடுவோம். காலையில் இன்ஸ்பெக்டர் நமக்கு வேண்டியதைச் செய்வார். இரவு மட்டும் சமாளித்துவிட்டால் போதும். நானும் வருகிறேன். வா! போகலாம்'' என்று ராகவன் புறப்பட்டான் மனேஜர் பின் தொடர. யாரும் கவனிக்காதபடி மறைவாகவே சென்று புளிய மரப் பொந்தில் அந்தக் காகிதத்தை வைத்து அது பறந்து விடாதபடி ஒரு கல்லையும் அதன்மீது வைத்து விட்டுத் திரும்பினார்கள். மரங்களின் நிழலில் ஒரு கரிய உருவம் பதுங்கிப் பதுங்கி அவர்களைப் பின்தொடர்ந்து அவர்கள் செய்த வேலையை கவனித்துவிட்டுத் திரும்பியதை இருவரில் ஒருவர் கூடக் கவனிக்கவில்லை.

## 21

மறுநாள் காலை பொழுது விடிந்தபோது அந்த வீடே பெரிய மாறுதல்களுடன் விளங்கிற்று. எப்போதும் காலை ஏழுமணி வரை வாசற்கதவு அருகே வீரன் சிலை போல நின்று காவல் புரியும் கூர்க்கா வாலை அங்கே காணவில்லை.

குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டும் மற்றவர்களிடம் மிரட்டி வஞ்சனை இல்லாமல் வேலை வாங்கிக்கொண்டும் திரியும் முறுக்கு மீசை முருகனைக்கூட காணவில்லை. மானேஜர் சந்தானம் எங்கேயோ தலைமறைந்து விட்டார். எப்போதும் வீட்டிலிருக்கும் கலகலப்புக் காணப்படவில்லை. மயான அமைதிதான் அங்கே நிலவியிருந்தது. இவை எல்லாம் புதுமையாயிருந்தன.

அந்தச் சாமான் அறையிலே அலமாரி முழுவதும் காலியாயிருந்தது. ஒரு ஷர்பத் சீசாவைக் கூடக் காணமுடியவில்லை. இருந்த வேலைக்காரர்களை விசாரித்தும் பயன் ஏதும் ஏற்படவில்லை. அவர்களும் விஷயம் புரியாமல் விழித்ததுதான் மிச்சம். 'பயல்கள் காரியம் ஆனதும் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டார்கள் போலிருக்கிறது. இனிமேல் செய்ய வேண்டியது என்ன?' என்ற திகைப்புத்தான் மிஞ்சிற்று. ஏதோ நினைத்தவனாக மனேகர் மேல் மாடிக்கு ஓடினான். ராகவனும் அவனுடன் சென்றான்.

(தொடரும்)





# டில்லி பாட்சாக் கதை

*கீதா*

புகழ் பெற்ற டில்லி நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அக்பர் பாட்சாவின் சமஸ்தானத்தில், மேதா என்னும் பெயர் உள்ள மந்திரி ஒருவர் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்.

மக்களின் இயல்பை நன்றாக உணர்ந்தவர் மேதா. அவர்களுடைய நன்மையில் அக்கறையிருந்தவர். ராஜாங்கத்தைத் திறமையாக நடத்தும் சக்தி பெற்றவர். சமயத்துக்கேற்ற யுக்தியும் புத்தியும் நிரம்பப் பெற்றவர். எனவே அக்பர் பாட்சாவுக்கு மேதாவிடம் நம்பிக்கையும் பிரியமும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தன. அவ்வப்போது மேதாவின் சாதுரியமான பதில்களையும் செயல்களையும் கேட்டு வியந்த அக்பர், மந்திரிக்கு அநேக சம்மானங்களை வழங்கி வந்தார்.

அக்பர் பாதுஷா ஒரு நாள் விடியற் காலையில் குதிரை மேல் ஏறிக்கொண்டு வயல்களுக்கிடையே சென்றுகொண்டிருந்தார். கிழக்கு வானத்தில் சூரியன் மெல்ல மேலெழுந்தான். எருதுகளை ஓட்டிக்கொண்டு கலப்பைகளைத் தோளில் சுமந்தபடியே குடியானவர்கள் தங்கள் வயல்களை நோக்கிச் சென்றனர். தோட்டத்துக் கிணறுகளில் சிலர் பயிர்களுக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்தார்கள்.

பாதுஷா செல்லும் வழியில் ஓர் அழகான தாமரைக் குளத்தைக் கண்டார். செக்கச் செவேர் என்று சிவந்த மலர்களைப் பார்த்து, குதிரையை விட்டு இறங்கிப் பொய்கைக் கரையை அடைந்தார். தமக்கு வேண்டிய அளவுக்குத் தாமரை மலர்களைப் பறித்துக் கொண்டார். மீண்டும் குதிரையை நோக்கி, மலரின் அழகை வியந்தபடியே மெல்ல நடந்தார். அந்தச் சமயத்தில் மூன்று கிராமத்துப் பெண்கள் ஓர் ஆலமரத்தின் அடியில் தங்கியிருப்பதைக் கண்டார். மூவரும் அந்தக் குளத்தில் நீராடிவிட்டுத் தங்கள் வீடுகளுக்குக் குடிதண்ணீர் எடுத்துச் செல்ல வந்தவர்கள் என்பதை அக்பர் உணர்ந்து கொண்டார். அவர்கள் எதைப்பற்றியோ வேடிக்கையாகப் பேசிச் சிரித்து மகிழ்வதை நின்று கேட்டார்.

"அடி, காலும் கட்டையும்

ஒன்றே'' என்று ஓர் இளம் பெண் சொல்லி நிறுத்தியது அக்பர் பாதுஷாவின் காதில் விழுந்தது. அந்த வார்த்தை அவருக்கு விநோதமாக இருந்தது. ஆனால் பொருளோ புரியவில்லை. செடிகளின் மறைவில் இன்னும் சிறிது தூரம் நெருங்கி அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டார் பாதுஷா.

''ஆமாம், அடி. வாயும் பழமும் ஒன்றுதான்'' என்று மற்றொருத்தி பேசியது இப்போது அவருடைய காதில் தெளிவாகக் கேட்டது. இரண்டாவது பெண்ணின் வார்த்தையும் அக்பர் பாதுஷாவுக்கு விசித்திரமாகவே தோன்றியது. 'அந்தச் சாதாரணப் பெண் புரிந்து கொண்டு சொன்ன பதில் கூடப் புரியவில்லையே' என்று ஒரு விநாடி திகைத்தார். மூன்றுவது பெண் முன் இருவர் பேசிய வார்த்தையின் பொருளைத் தெளிவாகக் குறிப்பிட மாட்டாளா என்று காதைத் தீட்டிக்கொண்டு பாதுஷா நின்றூர்.

மூன்றும் பெண் பதில் அளித்தாள்: ''ஆமாம். நீங்கள் இருவரும் சொன்னது சரியே. ஆனால் ஒன்றை மறந்து விட்டீர்களே? இறக்கையும் இலையும் ஒன்றே; அதைப் பாருங்களடி!'' இதைக் கேட்டதும் மீண்டும மூன்று பெண்களும் கல கலவென்று வாய்விட்டுச் சிரித்தார்கள். அக்பர் பாதுஷாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. பட்டிக்காட்டில் வாழும் சாதாரண கிராமப் பெண்கள் பேசும் வார்த்தைகளுக்குப் பொருள் தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று வெட்கப்பட்டார். சரேலெனக் குதிரை மேல் ஏறிக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பி விட்டார்.

பாதுஷா அரண்மனை வந்த சமயத்தில் பிரதம மந்திரி மேதா எங்கேயோ வெளியே சென்றிருந்தார். வேறு மந்திரிகள் சிலரே இருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் உடனே அழைத்தார்.

'''காலும் கட்டையும் ஒன்றே; வாயும் பழமும் ஒன்றே; இலையும் இறக்கையும் ஒன்றே'' - இந்தச்



சொற்களின் பொருளைச் சற்று விளக்கமாக எனக்கு எடுத்துச் சொல்லுங்கள்'' என்று அந்த மந்திரிகளை அக்பர் பாதுஷா கேட்டுக் கொண்டார். அவர்கள் எல்லாரும் நெடுநேரம் யோசித்துப் பார்த்தார்கள். ஆனால் பாதுஷாவுக்குத் திருப்தியான பதில் எதுவும் சொல்லத் தெரியாமல் விழித்தார்கள். கடைசியில் ''பாதுஷா அவர்களே! எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மன்னிக்க வேண்டும்'' என்று பணிவும் பயமும் கலந்த குரலில் மந்திரிகள் பதில் அளித்தார்கள்.

இந்த அற்ப வார்த்தைகளுக்குக் கூடப் பொருள் தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று கடிந்து கொண்டார் பாதுஷா. சிறிது நேரம் கழிந்தது. மேதா அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

''மேதா என்று இயல்பாகவே பெயர் பெற்ற பிரதம மந்திரி அவர்களே, ஒரு சிறு சந்தேகம். தெளிவு பெறச் செய்யவேண்டும்'' என்று பாதுஷா மெல்ல ஆரம்பித்தார்.

''மன்னர் பெருமானுக்கு அவ்வப்போது தோன்றும் சந்தேகங்களைப் போக்கி, தெளிவடையச் செய்வதுதானே மந்திரிகளின் கடமை; சந்தேகத்தைச் சொல்லுங்கள்'' என்றார் மேதா.

தாம் கேட்ட மூன்று சொற்களையும் பாதுஷா தெரிவித்து, இன்றைக்குச் சூரியன் மறையும் முன்பு பதில் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.

மேதா சிறிது நேரம் யோசனை செய்தார். பாதுஷா சூரியோதயத்தின் போது குதிரையேறி வெளியே சென்றது, அவருடைய நினைவுக்கு வந்தது. பிறகு இன்னும் கொஞ்சம் யோசித்தார். பாதுஷாவின் அருகே நீரைச் சொட்டும் காம்புகளுடைய புத்தம் புதிய தாமரையைக் கண்டார். மேலும் கண்களை மூடிக்கொண்டு சில கணம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

'சூரியோதய காலத்தில் தோன்றிய சந்தேகங்களுக்குச் சூரியாஸ்தமனத்துக்குள் விளக்கம் வேண்டுவது பொருத்தமே'' என்ற வார்த்தைகள் மேதாவிடமிருந்து வெளிவந்தன.

பாதுஷா ஆச்சரியமடைந்தார். மேலும் ஆவலுடன் மேதாவின் பதிலை எதிர் நோக்கலானார். கண்களை மூடியபடியே, ''தாமரைக் குளத்தின் அருகே கண்ட காட்சி தானே அது?'' என்று மேதா கேள்வி கேட்டார்.

''ஆமாம்'' என்று பதில் தந்தார், வியப்புடன் பாதுஷா.

''நீங்கள் கேட்ட மூன்று சொற்களும் கிளிகளைக் குறிப்பிடுகின்றன. போதுமா?'' என்றார் கண்களைத் திறந்தபடியே மேதா.

''இப்பொழுதும் புரியவில்லையே, எப்படிப் பொருந்தும்?'' என்று தொடர்ந்து கேட்டார் அக்பர்.

''தாமரைக் குளத்தின் அருகே ஓர் ஆலமரம் இருக்கிறது அல்லவா? அதன் மேல் சற்றுப் பழுத்த நிறமுள்ள மரக்கிளையில் ஒரு கிளி உட்கார்ந்திருந்தது. அதன் காலும் கட்டையும் ஒரே நிறமாசத் தெரிந்தன, கீழே இருந்தவர்களுக்கு'' என்றார் மேதா.

''அடடா! ஆமாம். ஆமாம்'' என்று தலையை ஆட்டினார் பாதுஷா.

''கிளியின் சிவந்த வாயும் ஆலம் பழத்தின் சிவந்த பழமும் ஒன்றே'' என்றார் மேதா நிதானமாக.

''சபாஷ்'' என்று கையைத் தட்டி மகிழ்ச்சியால் சிரித்தார் பாதுஷா.

''பச்சைக் கிளியின் இறக்கையும் இலைகளும் ஒன்றே'' என்று பாதுஷாவே கடைசிச் சொல்லின் பொருளையும் சொல்லி மீண்டும் கல கலவென்று சிரித்தார்.

மேதாவின் புத்தி சாதுரியத்தைப் பாதுஷா அன்று மிகவும் மெச்சினார். மரகதக் கல் பதித்த பச்சைக் கிளி ஒன்றையும் தங்கத் தட்டு நிறையக் காபுல் திராட்சைப் பழங்களையும் பாதுஷா மேதாவுக்குச் சம்மானமாக அளித்தார்.

# சாந்தாவின் சபதம்

## பூவண்ணன்

குழந்தைகளுக்காக வெளி வரும் பத்திரிகைகளில் கதை, கட்டுரை எழுதும் மாணவிகள் சிலரில் சிறந்தவள் சாந்தா. சாந்தா சமீபத்தில்தான் எழுதத் துவங்கினுள். என்ருலும் கருத்துக்கள் நிறைந்த கற்பனையால், விறு விறுப்பான எளிய இனிய நடையால் வாசகர்களின் உள்ளத்தைக் கவர்ந்தாள்; ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ருள்.

சாந்தாவுக்கு முன்பே அவளுடைய சிநேகிதிகள் சந்திரா, சரளா, சரோஜனி ஆகியோர் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாரையும் விடச் சாந்தா அதிகமான புகழ் அடைந்துவிட்டாள். நிறைய கதைகளும் எழுதி விட்டாள். இதனுல் சாந்தாவைக் கண்டு, சந்திராவைத் தவிர பிறர் பொருமை கொண்டனர். சந்திரா தான் சாந்தாவை முதன் முதலில் எழுதத் தூண்டியவள். என்ருலும் அவள் ஒருத்தி மட்டும் சாந்தாவின் புகழைக் கண்டு பொருமை அடையாமல், அவளே மேலும் மேலும் ஊக்கினுள்.

'மல்லிகைப் பதிப்பகம்', குழந்தைகளுக்கான சிறந்த புத்தகங்களே வெளியிட்டு வந்தது. அந்தப் பதிப்பகத்தார் தம்பி தங்கைகளின் அமோக ஆதரவு பெற்ற சாந்தாவின் சிறுகதைகளேத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட விரும்பினர். அதன்படி சுமார் 100 பக்கங்கள் வரும்படியான சிறுகதைகளேத் தங்களுக்கு உடனே அனுப்பி வைக்கும்படி சாந்தாவுக்கு ஒரு கடிதம் எழுதினர்.

மல்லிகைப் பதிப்பகத்தார், தனக்கு எழுதிய கடிதத்தைச் சாந்தா சந்திராவுக்குக் காட்டிக் கொண்டிருந்தாள். அப்போது சரளாவும் சரோஜாவும் வந்தனர்.

''என்ன சாந்தா, எதையோ சந்திராவுக்கு மட்டும் காட்டுகிருயே; எங்களுக்கும் காட்டக் கூடாதா?'' என்று கேட்டாள் சரோஜா.

''காட்டாமல் என்ன! பாருங்கள்'' என்று சொல்லி மல்லிகைப் பதிப்பகத்தார் அனுப்பிய கடிதத்தை அவர்களிடமும் காட்டினுள் சாந்தா. சரோஜாவும் அந்தக் கடிதத்தைப் படித்தாள். தங்களுக்குப் பிறகு எழுத ஆரம்பித்த சாந்தாவின் கதைகள் புத்தகமாக வெளிவருவதை அறிந்து பொருமினர். ''உன் புத்தகம் வெளிவருவதைப் பற்றி மிக்க சந்தோஷம்'' என்று கூறி விட்டு இருவரும் போய்விட்டனர்.

* * *

**சா**ந்தாவும் சந்திராவும் சேர்ந்து, பிரசுரத்துக்கான சிறந்த கதைகளேத் தேர்ந்தெடுத்தனர்.

''சந்திரா! நான் எழுதிய 'தந்தப் பொம்மை' என்ற கதையை நீ படித்திருக்கிருயா?'' என்று கேட்டாள் சாந்தா.

''ஓ! படித்திருக்கிறேனே. அது தானே உன் முதல் கதை,'தாமரை' பத்திரிகையில் வெளிவந்தது? அதையும் இந்தச் சிறுகதைத் தொகுதியில் சேர்த்து விடலாமே. அது மிக மிகச் சிறந்த கதை, சாந்தா! புத்தகத்திற்குக் கூட 'தந்தப் பொம்மை' என்றே பெயர் வைத்து விடலாமே'' என்று கூறினுள் சந்திரா.

''ஆமாம் சந்திரா! அந்தக் கதை தான் எனக்கு மிகவும் பிடித்த கதை. ஆனுல் அந்தக் கதை வந்த இதழ் என்னிடம் இல்லே. தொலேந்துவிட்டது. 'தாமரை' காரியாலயத்தாருக்கும் எழுதிக் கேட்டேன். அந்த இதழ் கைவசம் இல்லே என்று எழுதிவிட்டனர்.

இதற்கென்ன செய்வது?'' என்று சொன்னாள் சாந்தா.

''என்னிடம்கூடப் பழைய 'தாமரை' இதழ்கள் இல்லை. சாந்தா! நம் சரோஜா ஒன்று விடாமல் ஆரம்பத்திலிருந்து வைத்திருப்பதாகச் சொன்னாள். அவளிடம் போய்க் கேட்டுப் பார்'' என்று யோசனை கூறினாள் சந்திரா.

''அப்படியா! நாளைக்கே போய்க் கேட்கிறேன்!'' என்றாள் சாந்தா.

* * *

மறுநாள்;

சாந்தா சரோஜாவின் வீட்டை நோக்கிச் செல்லும் வழியில் சரளாவைப் பார்த்தாள். ''எங்கே போகிறாய் சாந்தா?'' என்று கேட்டாள் சரளா.

''சரோஜாவின் வீட்டிற்கு''— சாந்தா சுருக்கமாகப் பதில் சொன்னாள்.

''சரோஜா வீட்டிற்கா? நானும் அங்கேதான் போகிறேன். என்ன சமாசாரம்?''

''ஒன்றுமில்லை. 'தாமரை' இதழில் வெளிவந்த 'தந்தப் பொம்மை' கதை என்னிடம் இல்லை. அதை என் சிறுகதைத் தொகுதியில் சேர்க்க எண்ணியுள்ளேன். அந்தக் கதை வந்த இதழைச் சரோஜாவிடம் கேட்டு வாங்கிக்கொண்டு போகலாம் என்று வந்தேன்.''

''அப்படியா! உன் 'தந்தப் பொம்மை' கதை வந்த 'தாமரை' இதழ் அவளிடம் இல்லை. எனக்கு நன்றாகத் தெரியும். நீ ஏன் வீணாக அவள் வீட்டிற்குப் போகிறாய்?'' என்றாள் சரளா.

சரளாவின் சொல்லின் பொருளைப் புரிந்துகொண்டாள் சாந்தா. ''சரளா! அந்தக் கதை வந்த இதழ் சரோஜாவிடம் இருந்தாலும், தரவேண்டாம் என்று சொல்லலாம் என்றும் நினைக்கிறாய். அப்படித்தானே! சரோஜாவிடம் அந்த இதழ் இல்லை என்றால் நான் திரும்பிப் போகிறேன். நீ ஏன் அதைப்பற்றிக் கவலைப்படுகிறாய்? எனக்குத் தெரியாதா, நீ எப்படிப் பட்டவள் என்பது?'' என்று அவசரப்பட்டு ஆத்திரத்தோடு கூறிவிட்டாள் சாந்தா. ''ஆமாம் சாந்தா, அப்படித்தான். சரோஜாவிடம் 'தந்தப் பொம்மை' இருந்தாலும் உனக்குத் தரவேண்டாம் என்றுதான் கூறப்போகிறேன். அவளிடமிருந்து ஒரு நாளும் அதை உன்னால் வாங்க முடியாது'' என்றாள் சரளா.

''அதையும் பார்ப்போம்! அவளிடம் 'தந்தப் பொம்மை' இருந்தால் அதை நிச்சயம் நான் வாங்கிவிடுகிறேன், பார்'' என்றாள் சாந்தா.

''சாந்தா உன் சபதம் நிறைவேறப் போவதில்லை'' என்று கூறிச் சிரித்தாள் சரளா.

அதற்குமேல் இருவரும் ஒன்றும் பேசாமல் நடந்தனர். சாதாரணமாகவே சாந்தாவுக்கும் சரளாவுக்கும் தகராறு இருந்துகொண்டிருப்பது வழக்கம். அது அன்றும் நிகழ்ந்துவிட்டது.

இருவரும் சரோஜாவின் வீட்டிற்குச் சென்றனர். சரோஜா இருவரையும் வரவேற்றாள். சாந்தா சரோஜாவிடம் பேசுவதற்கு முன்பு, அவளைத் தனியே அழைத்துச் சென்று ஏதோ கூறினாள் சரளா. அவள் என்ன சொல்லியிருப்பாள் என்பது சாந்தாவுக்குத் தெரியும். ''தந்தப் பொம்மை உள்ள இதழைத் தராதே'' என்று சொல்லியிருப்பாள்.

சரோஜா திரும்பி வந்ததும், ''சரோ? உன்னிடம் தாமரை இதழ்கள் ஒன்றுவிடாமல் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். என் 'தந்தப் பொம்மை' வெளி வந்த இதழைக் கொஞ்சம் கொடு. என் கதையை எழுதிக்கொண்டு திருப்பித் தந்துவிடுகிறேன்'' என்று கேட்டாள் சாந்தா.

''என்னிடம் இருப்பது சரிதான்; ஆனால் அவற்றில் பல தொலைந்துவிட்டன. இருக்கும் இதழ்களில் தேடிப் பார்க்கிறேன். அவற்றில் உனக்குத் தேவையான இதழ் இருந்தால் நிச்சயம் கொடுக்கிறேன். ஆனால் எனக்கு இப்போது வேலை இருக்கிறது. நாலைந்து நாட்களுக்குப் பிறகு வா. தேடிப் பார்த்துச் சொல்கிறேன்'' என்றாள் சரோஜா.



சாந்தா-''சரி, நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பினுள், அவள் காதில் சரளாவின் கேலிச் சிரிப்பு நன்ருகக் கேட்டது.

* * *

இரண்டு நாட்கள் சென்றன.

சந்திரா, சரோஜாவின் வீட்டிற்குச் சென்ருள். சரோஜாவிடம் சிறிது நேரம் எதை எதையோ பேசிக்கொண் டிருந்தாள். பிறகு, ''சரோ, இந்த வாரம் 'குல்கந்து, பத்திரிகையில் வெளி வந்த உன்னுடைய கதையைப் படித்தேன்'' என்று சொன்னுள் சந்திரா.

''படித்தாயா? எப்படி யிருக்கிறது?'' என்று ஆவலுடன் கேட்டாள் சரோஜா.

''என் மனத்தில் பட்டதைச் சொல்கிறேன். கோபித்துக் கொள்ளாதே, சரோ. அந்தக் கதை, பிரபல குழந்தை எழுத்தாளர் 'கலைச் சோமன்' தாமரை இதழில் எழுதிய 'இதுதான் முடிவு' என்ற கதையைப் போலவே இருக்கிறது'' என்ருள் சந்திரா.

சரோஜாவின் கண்கள் சிவந்தன. அவள் எவ்வளவு கஷ்டப்பட்டு எழுதிய கதை அது. அதைப் போய், 'காபி அடித்தது' என்ருல் கோபம் வராதா? மேலும் கலைச் சோமனின் 'இதுதான் முடிவு' என்பதைப் படித்திருந்தாள். அதற்கும் அவள் கதைக்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லை. அதனுல் ஆத்திரத்தோடு,

''சந்திரா! பொய் சொல்வதற்கும் ஓர் அளவு வேண்டும். 'இதுதான் முடிவு' கதை வேறு! என் கதை வேறு!'' என்று சொன்னாள்.

''சரோ! உன் கோபத்தை என்னிடம் காட்டாதே! இதுதான் முடிவு என்ற கதையின் நகல்தான் உன்னுடைய கதை! வேண்டுமானால் ஒரு ரூபாய் பந்தயம் கட்டுகிறேன். உன்னிடம் 'இதுதான் முடிவு' கதை இருந்தால் கொண்டு வா! இப்போதே நான் சொன்னதை நிரூபிக்கிறேன்'' என்றாள் சந்திரா.

சரோஜா அவசர அவசரமாக எழுந்து உள்ளே ஓடினாள். ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு தாமரை இதழ் ஒன்றுடன் சந்திரா இருந்த அறைக்குள் வந்தாள். கதையைக் கண்ட சந்திரா இருந்தவிடத்தை விட்டு எழுந்து அந்த அறையில் இருந்த ஜன்னல் அருகில் போய் வெளியே எச்சில் துப்பிவிட்டு வந்தாள்.

''சந்திரா, இதோ 'இதுதான் முடிவு.' படித்துப் பார்!'' என்று கொடுத்தாள் சரோஜா.

சந்திரா அந்தப் பத்திரிகையை வாங்கினாள். அதைப் புரட்டிப் பார்த்தாள். பிறகு 'இதுதான் முடி'வைச் சிறிது படித்தாள். பிறகு, ''மன்னிக்கவேண்டும் சரோ! இது வேறு கதை. உன் கதை காபி அடித்த கதையில்லை. பந்தயப்படி இந்தா ஒரு ரூபாய்'' என்று கூறிக்கொண்டே அவளிடம் தாமரை இதழையும், ஒரு ரூபாயும் கொடுத்தாள். சரோஜா வெற்றிக் களிப்போடு அதை வாங்கிக்கொண்டாள்.

அதே நேரத்தில், ''வணக்கம் சரோ'' என்று கூறிக்கொண்டே சாந்தாவும் அவள் தங்கையும் உள்ளே வந்தனர். சாந்தா சரோஜாவின் கையிலிருந்த 'தாமரை' இதழை, ''சபாஷ், சரோ'' என்று கூறிக்கொண்டே பிடுங்கினாள். அதைப் புரட்டினாள். அதில் 'தந்தப் பொம்மை' இருந்தது.

''சரோ! நீ சொன்னபடி என் தந்தப் பொம்மை வந்த இதழைத் தேடி எடுத்து வைத்திருக்கிறாயே! ரொம்ப நன்றி! இதை நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். என்ன சரிதானே!'' என்று கேட்டாள் சாந்தா.

'தந்தப் பொம்மை' வந்த இதழே தன்னிடம் இல்லை என்று கூறிவிடலாம் என்று நினைத்த சரோஜா வேறு வழியில்லாமல் சரியென்று தலையை அசைத்தாள். சாந்தா கதையைத் தன் தங்கையிடம் கொடுத்து ''பத்மா! சீக்கிரம் வீட்டுக்குப் போய் இந்த இதழிலிருக்கும் என் கதையை எழுதிக்கொண்டிரு. நான் வருகிறேன்'' என்றாள்.

பத்மா, தாமரை இதழை எடுத்துச் செல்வதைப் பார்த்தபடி அங்கே வந்தாள் சரளா.

''வா சாளா! என் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன். சரோவிடமிருந்து 'தந்தப் பொம்மை'யை வாங்கிவிட்டேன்'' என்றாள் சாந்தா.

சரளா ஒன்றும் கூறாமல் சரோவைப் பார்த்தாள். அதற்குள் சாந்தா பேசினாள்.

'நான் ஜன்னலில் வந்து சைகை காட்டும்போது எதிர் வீட்டிலிருந்து உள்ளே வா, வந்தால் அங்கே உனக்குத் தேவையான தாமரை இதழ் இருக்கும்' என்று கூறிவிட்டுச் சந்திரா சரோவிடம் வந்திருக்கிறாள். ஓர் எழுத்தாளர் எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் தன் சொந்தக் கதை காபியடித்தது என்பதை மட்டும் சகிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து சந்திரா செய்த தந்திரத்தை மற்ற அனைவரும் வியந்தனர்.

''சரளா! சரோ! நாம் அனைவரும் சிநேகிதிகள். ஒருவர் புகழைக் கண்டு மகிழாமல் பொறாமை யடையலாமா? ஒருத்தி உதவி கேட்கும்போது மறுக்கலாமா? உதவி கிடைக்காதவாறு குறுக்கே நிற்கலாமா? இனி அவ்விதம் செய்ய வேண்டாம். நாம் ஒன்றுபட்டு வாழ்வோம்'' என்றாள் சாந்தா.

# முதலுக்கே மோசம்

சம்பந்தம்

அவன் அந்த வகுப்பில் தான் சட்டாம்பிள்ளை என்றில்லை. ஆரம்ப வகுப்பிலிருந்தே அவன் சட்டாம்பிள்ளையாகத்தான் இருந்து கொண்டிருந்தான். அதனால் அவன் பெயரே மானீட்டர் மாணிக்கம் என்றல்லவா ஆகிவிட்டிருந்தது!

அன்று காலை பள்ளிக்குப் புறப்படச் சற்று நேரமாகி விட்டது. புத்தகப் பையைத் தோளில் மாட்டிக்கொண்டு விறுக் விறுக்கென்று வேகமாய் வந்துகொண்டிருந்தான் மாணிக்கம்.

அவன் வகுப்புக்குப் புது வாத்தியார் வந்து ஐந்தாறு நாட்களே ஆகியிருந்தன. அதற்குள் அவரிடம் 'தாமதமாய் வருகிறவன்' என்ற பெயர் எடுத்துக்கொள்ளக் கூடாதல்லவா? அதோடு அவர், 'என்னடா இது! மானீட்டரே இப்படித் தாமதமாய் வர ஆரம்பித்தால் என்ன செய்வது?' என்று நினைத்தால்? ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தான்.

வழக்கப்படி அன்றும் நேரத்தோடுதான் புறப்பட்டான் மாணிக்கம். அது வருஷப் பிறப்புச் சமயமாதலால் ''இருடா போகலாம். இதோ தையற்காரனை வரச் சொல்லி யிருக்கேன். சட்டைக்கும் நிஜாருக்கும் அளவு கொடுத்துட்டுப் போடா'' என்றார் அவன் அப்பா. அதனால் தான் சற்று தாமதம்.

அவன் நல்ல காலம் அந்த வாத்தியாரே அதுவரை வரவில்லை; சற்றுநேரம் கழித்துத் தான் வந்து சேர்ந்தார். வகுப்புப் பிள்ளைகளெல்லோரும் 'கப் சிப்' என்றிருந்தனர். ''மாணிக்கம், தேவலையடா நீ, ஒழுங்காகப் பார்த்துக் கொள்கிறாயே!'' என்றொரு ஷொட்டுச் கொடுத்தார். மாணிக்கத்திற்கு உள்ளூறச் சந்தோஷம்.

முதல் வேலையாகப் பிள்ளைகளின் 'அட்டெண்டன்ஸ்' எடுக்கத் தொடங்கினார் வாத்தியார். பேனாவிற்காகத் தம் பையில் கை போட்டார். 'பேனாவைக் காணோமே! அடடா! பேனாவிற்கு மை போட்டு மேஜையின் மீதே வைத்துட்டு வந்து விட்டோமே!' என்று சூள் கொட்டிக்கொண்டே, ''உன் பேனாவை எடுடா, மாணிக்கம்'' என்றார்,

உடனே தன் பேனாவை மிகப் பெருமையுடன் எடுத்தான் மாணிக்கம். கிளிப்புடன் தங்க மேல்மூடி தான் கையில் வந்தது; அடிப் பேனாவைக் காணோம். திக்கென்றது அவனுக்கு. அது உயர்ந்த பார்க்கர்



பேனு அல்லவா? ''ஸார், பள்ளிக் கூடத்துக்கு ஓடிவந்தபொழுது வழியில் விழுந்துட்டது போலி ருக்கே!'' என்று பதை பதைத்தான் அவன்.

அதற்குள் மற்ெருரு பையன் அவன் பையைப் பார்த்துவிட்டு, ''இதோ பையிலே மை கொட்டி யிருக்குதேடா! உள்ளேயே விழுந் திருக்கும்போலிருக்கே!'' என்று அவன் பையைத் தடவினுன். ஆம்! அது உள்ளேயேதான் கவிழ்ந்து கிடந்தது. மாணிக்கத்துக்குச் சென்ற உயிர் திரும்பி வந்தது அதைப் பார்த்ததும்.

உடனே பெயரைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தார் வாத்தியார்.

''மாணிக்கம்'' என்று கூப்பிட்ட பொழுது பதிலே காணேம்! அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருந்தான். ''மாணிக்கம், மாணிக் கம்'' என்று மற்றப் பிள்ளைகள் அதட்டிய பிறகுதான் சுய உணர்வு வந்தது அவனுக்கு.

அந்தத் தங்க மூடி போட்ட பார்க்கர் பேனு மலேயாவிலிருந்த அவன் மாமா வாங்கி அனுப்பியது. அதை அவன் அப்பாதான் பத்திர மாய் வைத்து எழுதிக்கொண்டிருந் தார். ஒரு தடவை கைதவறிக் கீழே விழுந்ததில் அந்தப் பேனு வின் மேல்மூடி தளர்ந்துபோய் விட்டது. அதிலிருந்து அடிக்கடி தானே கழன்றுகொண்டிருந்தது பேனு. இருந்தும் அதை ஜாக்கிர தையாக வைத்துக்கொண்டிருந் தார் அவன் அப்பா.

இரண்டு தினங்களுக்கு முன் மாணிக்கத்தின் பேனு உடைந்து விட்டது. ''மாதக்கடைசியில் வேறு பேனு வாங்குவதற்குப் பணத்திற்கு எங்கே போவது? புதுப்பேனு வாங்குகிறவரை கட்டைப் பேனு வில் எழுதிக்கொண்டு இரேண்டா'' என்று சொல்லிப் பார்த்தார் அப்பா. மாணிக்கம் சற்று முரண்டு செய்தான்.

''அதுவரை நீ வைத்திருக்கிற பார்க்கர் பேனவைக் கொடேன், அப்பா'' என்ருன்.

''அதன் தங்க மூடிதான் தளர்ந்து போயிருக்கே! நீ எங்கே யாகிலும் போட்டுத் தொலைத்து வைத்தால்?'' என்று மறுத்துச் கொண்டு சொன்னுர்.

''இல்லை, அப்பா நான் பத்திர மாய் வைத்துக்கொள்கிறேன்.'' கெஞ்சும் குரலில் கேட்டு அப் பொழுதே அதை வாங்கிக் கொண்டு விட்டான்.

ஆனுல் சற்று நேரத்திற்குமுன், தளர்ந்து போயிருந்த அந்தத் தங்க மூடியினுல் ஏற்பட்ட தகரா றில் அவன் மனம் என்ன பாடுபட் டது! ''சே! சே! சாயங்காலம் போனதும் முதல்வேலையாக இந்தப் பேனுவைக் கழற்றி அப்பாவிடம் கொடுத்துவிட வேண்டியதுதான்'' என்று தீர்மானித்துக்கொண்டான் மாணிக்கம்.

அன்று மாலை நாலு மணி ரெயி லில்தான் அந்தப் புது வாத்தி யாரின் குடும்பத்தார் முதன் முதலாக அந்த ஊருக்கு வர இருந் தார்கள். அவர்களை அழைத்து வர, சற்று முன்கூட்டியே ஹெட் மாஸ்டரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு ரெயிலடிக்குச் சென்று விட்டார் வாத்தியார்.

பக்கத்து அறைதானே! ஹெட் மாஸ்டரே அடிக்கொரு தடவை எட்டி எட்டிப் பார்த்துக்கொண் டார். போதாக்குறைக்கு மானீட் டர் மாணிக்கமும் பிள்ளைகளைக் 'கப் சிப்'பென்று இருக்கச் சொல் லிப் பார்த்துக்கொண்டான்.

அந்தச் சமயத்தில் ஒரு வியாபாரி ஐந்தாறு அழகியப் பெட்டிகளைக் கையில் அடுக்கிக்கொண்டு, ''இது தானே ஹெட்மாஸ்டர் அறை?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே சென்ருர். ஹெட்மாஸ்டர் அவரை வரவேற்று உட்காரச் சொன்னுர். பிறகு ''இவைகளெல் லாம் ரொம்பவும் நேர்த்தியாயிருக் கின்றனவே!'' என்று ஏதேதோ பேசினுர்.

மாணிக்கத்திற்கு அவை என்ன என்று பார்க்க அளவற்ற ஆவல்! மெதுவாக எட்டிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அங்கே மேஜை மேல் திறந்து வைத்திருந்த அத் தனை வெல்வெட் பெட்டிகளிலும் வரிசை வரிசையாகத் தங்கமூடி போட்ட பவுண்டன் பேனுக்கள் பளபளத்துக் காட்டின. 'ஆ! அவை



களில் ஒன்று கிடைத்தால்போதுமே நமக்கு!' என்று எண்ணினுன் மாணிக்கம். உடனே தன் வாயில் ஊறின எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டான்.

ஏதேதோ பேனுக்களை யெல்லாம் பொறுக்கி எடுத்து வைத்தார் வியாபாரி. ஹெட்மாஸ்டர் அவைகளை எடுத்துப் பார்த்துக் கொண்டே, ''இவைகளெல்லாம் நன்ருய்த்தானிருக்கின்றன. இருந்தாலும் நான் எதிர்பார்த்த பேனுவை உங்களிடம் காணுமே! இதோ இப்படி வாருங்களேன்; அந்தப் பேனுவின் விளம்பரத்தைக் காட்டுகிறேன்'' என்று அந்த வியாபாரியை மேஜைக்கு அந்தண்டைப் பக்கம் அழைத்துச் சென்ருர் ஹெட்மாஸ்டர். இடையிலே ஒரு மரப்பலகையினுலான மறைப்பு இருந்தது.

மாணிக்கத்தின் மனம் 'பட்பட்' டென்று அடித்துக் கொண்டது. உடனே தன் பையிலிருந்த பேனுவை அவசர அவசரமாகக் கையில் எடுத்துக்கொண்டு விடுவிடென்று - ஆனுல் சந்தடி செய்யாமல் - உள்ளே சென்ருன். அங்கிருந்த ஒரு பேனுவின் மூடியைக் கழற்றி, தன் பேனுவுக்குப் போட்டுப் பார்த்தான். ஆகா! ஏதோ அதற்கான மூடியே போல் அப்படியே பொருந்தியது. வெடுக்கென்று இடுப்பில் செருகிக் கொண்டு திரும்பினுன் மாணிக்கம். எல்லாம் ஒரு நொடியில் நடந்தேறியது.

திரும்புவததற்குள் அந்தப் பக்கத்திலிருந்த இருவரும் மேஜையண்டை திரும்பிவிட்டார்கள். மாணிக்கத்தின் உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டியது; தலையும் கிறுகிறுத்தது.

''என்ன சேதி மாணிக்கம், பிள்ளைகள் ஒன்றும் ஒழுங்காய் நடந்து கொள்ளவில்லையா?'' என்ருர் ஹெட்மாஸ்டர்.

''இல்லை சார். அங்கே மிகுதியாயிருந்த 'சாக்பீஸை' வைக்க வந்தேன்'' என்று தட்டுத் தடுமாறிச் சொல்லிக்கொண்டே தன் வகுப்பிற்கு வந்துவிட்டான் மாணிக்கம்.

''சரி, நீங்கள் காட்டின அந்த ரகப் பேனா இப்பொழுது என் கை வசமில்லை. நாளைப் பார்சலில் வருகிறது. வந்ததும் உடனே கொண்டு வருகிறேன்'' என்று 'டப் டப்' பென்று அந்தப் பெட்டிகளை மூடி அடுக்கி எடுத்துக்கொண்டார் வியாபாரி.

''அப்பாவிடம் காட்டினால் என்ன சொல்வாரோ! ஆனால் அதற்குள் அகப்பட்டுக்கொண்டுவிட்டால்!'' மாணிக்கத்தின் தலை கிர்ரென்று சுற்ற ஆரம்பித்தது. 'இதோ இப்பொழுதுதானே அவர் எழுந்திருக்கிறார்! கீழே விழுந்து கிடந்தது என்று திருப்பிக் கொடுத்துவிட்டால்?' அடுத்த கணமே அந்த எண்ணம் மாண்டு மடிந்தது. இடுப்பில் செருகிக்கொண்டிருப்பது எங்கே தெரிந்துவிடப் போகிறதோ என்று தன் சட்டையை நன்றாய் இழுத்துவிட்டுக்கொண்டான் மாணிக்கம். அந்தச் சமயத்தில் முழங்கை வேறு மேஜையின் முனையில் இடித்துக்கொண்டு விண்விண்ணென்று தெறித்தது. அப்படியே மேஜை மீது சாய்ந்துகொண்டான்.

அந்த இடுக்கண்ணிலும் அவன் மனக்கண்ணின் முன் அப்பா தோன்றினார். 'இதுமாதிரி காரியம் செய்யலாமாடா?' என்று கையை ஓங்கிக்கொண்டு வந்தார். அடுத்த கணமே யாரோ தன் இடுப்பைத் தடவிப் பார்த்துவிட்டு, திருட்டைக்கண்டுபிடித்து விட்டதுபோல் பிரமை தட்டியது.

அதற்குள் பிள்ளைகள் ஏதேதோ இரைச்சல் போட ஆரம்பித்தார்கள். 'உஸ் சப்தம்! சப்தம்!' என்று மேஜையைத் தட்டினான் மாணிக்கம்.

நேரம் மிக மெதுவாக ஊர்ந்து சென்றது. ஏதோ தலை தப்பியது நம் பாக்கியந்தான் என்று முணுமுணுத்துக்கொண்டான்.

இதோ பள்ளிக்கூடம் விட இன்னும் ஐந்தே நிமிஷங்கள்தானிருந்தன. ஹெட்மாஸ்டர்கூட, தன் ஓயாத எழுத்து வேலையை முடித்துக்கொண்டு எழுந்துவிட்டாரே! திடீரென்று, ''ஸார்'' என்று அழைத்துக்கொண்டே அந்தப் பேனா வியாபாரி திரும்பி வந்தார்.

''ஓ! வாங்கோ!'' என்றார் ஹெட்மாஸ்டர். மாணிக்கத்திற்குச் சொரேல் என்றது. 'ஐயையோ! கண்டுபிடித்துவிட்டார் போலிருக்கிறதே! என்ன அவமானம்! இத்தனை நாட்களாகக் காப்பாற்றி வந்த நாணயம் எல்லாம் இப்படியா பறிபோகவேண்டும்? என்றுமில்லாமல் நம் புத்தி இன்று ஏன் இப்படிப் போயிற்றோ? சே! சே! இடுப்பிலிருந்து எடுத்து ஜன்னல் வழியாக எறிந்து விடுவோமா?' என்றெல்லாம் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் எழுந்து ஆர்ப்பரித்தன அவன் மூளையில்.

மெதுவாய் மீண்டும் அவன் பார்வை உள்ளே சென்றது. அவனுடைய பார்க்கர் பேனாவின் தங்க மூடி அந்த வியாபாரியின் கையிலிருந்தது. 'ஐயையோ! அந்தப் பேனாமூடியைத் திருடினபொழுது அந்தப் பெட்டியிலேயே தங்க மூடியைக் கை நழுவி விட்டுவிட்டேன் போலிருக்கே!' அவன் தலையில் யாரோ கனமான சம்மட்டியால் பலமாய் ஓங்கி அடித்தாற்போலிருந்தது. அப்படியே திகைத்து நின்றான்.

''பார்த்தீங்களா, ஸார்! என் பெட்டியில் ஒரு பேனாவின் மேல் மூடியைக் காணோம். அதற்குப் பதிலாக ஏதோ பார்க்கர் பேனாவின் தங்க மூடி அதிலிருந்தது. ஒரு வேளை உங்களுடையதாயிருக்குமோ என்று தான் கேட்க வந்தேன்.''

''இல்லையே! என்னுடையது இல்லையே! வேறு எங்கேயாவது போய் வந்திருப்பீர்கள். நன்றாய் யோசித்துப் பாருங்கள். இருக்கட்டுமே, உங்கள் பித்தளை மூடிக்குப் பதிலாக, ஒரு தங்கமூடி கிடைத்தது என்றால் உங்களுக்கு லாபந்தானே!''

''ஓ! லாபந்தான் அதில் என்ன சந்தேகம்? சரி வணக்கம். வரட்டுமா?'' என்று சொல்லி விடுவிடென்று வெளியே போய்க் கொண்டிருந்தார் அந்த வியாபாரி.

உலகமே சுழல்வது போலவும், பூமி வெடித்து, தான் அப்படியே

அதலபாதாளத்தில் அமிழ்வது போலவுமிருந்தது மாணிக்கத்திற்கு.

அதற்குள் 'கிணுங், கிணுங்' கென்று மணி அடித்தாகிவிட்டது. பெருத்த இரைச்சலுடன் பிள்ளைகளெல்லாம் வீட்டுக்கு ஓடினர்.

அப்பொழுது தன்னை அறியாது லேசாய் மாணிக்கத்தின் பார்வை தன் இடுப்பில் செருகியிருந்த அந்தப் பேனாமூடியின்மீது சென்றது. அதற்குள் அது அவன் வேர்வையில் அடிபட்டுக் கன்னங் கறுக்க அல்லவா காட்சியளித்தது! 'ஆ!' என்று தலையிலடித்துக்கொண்டு தள்ளாடி நடந்தான்.

பாதி வழியிலேயே அவன் அப்பா குறுக்கிட்டார். "அந்தப் பார்க்கர் பேனாவை எடுடா, சீக்கிரம். அதோ அந்தப் பேனா ரிப்பேர்க்காரன் 'அந்தத் தங்கமூடியைச் சரி பண்ணிக் கொடுக்கிறேன்' என்கிறான்" என்றார் அவர்.

மானீட்டர் மாணிக்கத்தின் முகத்தில் ஈயாடவில்லை, அப்படியே கற்சிலையானான்.

---

## வம்சாவளி




ராஜூத் தாத்தாவுடைய வம்சாவளியை இந்தப் படம் நமக்குக் காட்டுகிறது. அவருடைய மூன்று தலைமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது தலைமுறையில் ஒரு குழந்தைதான் அந்தக் குடும்பப் பெயரை அடையத் தகுதி உள்ளவன். (இந்தக் குடும்பங்களில் மகன் வயிற்று ஆண் குழந்தைகளுக்குத்தான் தங்கள் குடும்பப் பெயரை அடைய உரிமை உண்டு.) கடைசி வரிசையில் உள்ள குழந்தைகளில் ராஜூத் தாத்தாவின் குடும்பப் பெயருள்ள அந்தக் குழந்தை யார் என்பதைச் சொல்லமுடியுமா? [விடை: 34-ஆவது பக்கம்]

பரிசு பெற்ற தொடர்கதை:

மண. அரங்கசாமி



# ஸி.ஐ.டி சிங்காரம்

## 13

பரமசிவன் பிரமை பிடித்தவர் போலானார். தன் வீட்டில் களவு போனதற்குத் தகுந்த காரணத்தை அவர் உணர்ந்து கொண்டார். சமீப காலத்திலேயே அந்தப் பங்களாவில் குடிவந்ததால் அதன் ரகசிய வழியை அவரால் அறிந்து கொள்ள இயலவில்லை! அந்தச் சுரங்க வழியை அமைத்தவர் எந்தக் காரணத்திற்காக அதை அமைத்தாரோ? அருகிலே இருந்த நாற்காலியில் இவைகளைப்பற்றி எண்ணியபடியே தலைமீது கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார் பரமசிவம், பரங்கியூர் ஜமீன்தார்!

இருளில் மறைந்த சிங்காரம் தட்டித் தடுமாறியபடியே உள்ளே சென்றான். தரையில் புழுதி 'மெத்'தென்று இருந்தது. அந்தப் புழுதியில் காலடிகள் மங்கலாகத் தெரிந்தன. அவைகள் தாறுமாறாகக் கலைக்கப்பட்டுக் கிடந்தன!

பாதை வளைந்து வளைந்து மேடும் பள்ளமுமாக இருந்தது! சுவரெல்லாம் சுண்ணாம்பால் நன்றாகப் பூசப்பட்டு இருந்தது. நாற்பத்தைந்து நிமிடங்கள் அந்தப் பாதை வழியாகச் சென்றிருப்பான்; அப்போது சட்டென்று பேட்டரி தீர்ந்து விட்டது!

விளக்கு 'பக்'கென்று அணைந்து விட்டது. எங்கும் இருள் சூழ்ந்து ஒரே கருமையாகக் காட்சி அளித்தது. தடுமாறியபடி நடந்த அவன் காலில் 'டக்'கென்று அடிபட்டது! ''அப்பா!'' என்றபடி காலைப்பிடித்துக்கொண்டான். கைவிரல்களில் ஈரப்பசை பட்டது! அது 'பிசுபிசு' வென்றிருக்கவே ரத்தம்தான் என்று உணர்ந்துகொண்டான். எதிரே தன் காலில் மோதியதைத் தடவிப் பார்த்தான். அது ஒரு சிலை! அப்படியானால் அது ஒரு கோயிலா? அதைக் குறியாகக் கொண்டு நேரே நடந்தான்.

பல வாயிற்படிகளைத் தாண்டிய அவன் ஒரு பெரிய கதவின் முன் வந்து நின்றான். கதவைக் கைகளால் அசைத்துப் பார்த்தான். கதவு சிறிது அசைந்து கொடுத்தது. அதே சமயம் வெளியே பேச்சுக் குரல் தெளிவாகக் கேட்டது! சிங்காரம் ஒரு கணம் நிலைத்து



நின்று விட்டான்! சமாளித்துக் கொண்டு கதவின் பின்னால் ஒதுங்கி நின்றான். கதவைச் சிறிதும் சத்தமின்றித் திறந்து கொண்டு நாலைந்து ஆட்கள் 'தட தட' வென்று உள்ளே நுழைந்தார்கள்.

சிங்காரத்தின் மனம் 'தடக் - தடக்'கென்று அடித்துக் கொண்டது. அவன் அவர்களை உண்மையிலேயே எதிர் பார்க்கவே இல்லை! கையில் ஆயுதமில்லாமல் தாக்குவது எப்படி? அப்போது சற்றுப் பருமனாக இருந்தவன், ''என்ன அண்ணே, வெளக்கைக் கொளுத்து!'' என்றான்.

''அட, என்ன அண்ணாச்சி, அதுக்குள்ளாறக் வெளக்கைகொளுத்தச்சொல்றே! இருட்டவே ஆரம்பிக்கலே! கதவு திறந்தவுடனே மூடிவிட்டதால் இருள் சூழ்ந்திருக்கு.'' சிங்காரத்தின் கூர்மையான கண்களால்கூட அதற்குமேல் பார்க்க முடியவில்லை! மூடி இருந்த அவர்கள் முகங்கள் இருளில் இன்னும் கோரமாகத் தெரிந்தன!

அப்போது அவர்களில் ஒருவன் சிங்காரம் நின்றிருப்பதைப் பார்த்துவிட்டான் போலிருக்கிறது. ''தம்பி, அங்கே பாரு. ஏதோ ஒரு உருவம் தெரியுது!'' என்றான் சிங்காரம் நின்றுகொண்டிருந்த திசையைக் காட்டி. சிங்காரத்தின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

அப்போது அடுத்தவன், ''ஏ. காளியண்ணே! உனக்கு எப்பவும் இதுமாதிரி பயம் அதிகம். ஆளு, பேய், பிசாசின்னு காபுரா பண்ணறே! வாப்பான்னு, சும்மா வராமே!'' என்று ஓர் அதட்டல் போட்டான்.

''சரியண்ணே, என்மேலே ஏன் கோவிச்சுக்கறியே!'' என்று கூறி அவர்களுடன் மேலே உள்ளே சென்றான் அவன். சிங்காரம் மெல்ல மூச்சு விடலானான். கையில் தயாராகக் கொண்டுவந்திருந்த விளக்கைக் கொளுத்தினான். அந்த வெளிச்சத்தில் உள்ளே இருந்தவை எல்லாம் நன்றாகத் தெரிந்தன.

மிகவும் மூளியாகி இருந்த ஒரு சிலை அங்கே இருந்தது. அதன் உருவத்தைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. வந்திருந்தவர்களில் பருமனான ஒருவன் சிலையின் கழுத்தைத் தொட்டான். அது கையோடு வந்துவிட்டது! அதனுள் கையை விட்டான். வெளியே கையை எடுத்த அவன் கையில் ஒரு மூட்டை இருந்தது. அதைக் கீழே வைத்து அவிழ்த்தான். அதில் கத்தைக் கத்தையாக, கரன்ஸி நோட்டுகள், சில்லறைகள் இருந்தன!

சிங்காரத்திற்கு அதற்குமேல் தாமதிக்க மனம் ஒப்பவில்லை. வாயிற் கதவை அவர்கள் பார்க்காதபோது திறந்து, வெளிக்கதவை நன்றாகத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு விரைந்தான். அந்த மண்டபம், பிசாசுகள் வசிக்கும் இடிந்த பாழடைந்த பங்களா.

வேகமாக ஓட்டமும் நடையுமாக ரங்கராஜுவின் பங்களாவுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த 'பப்ளிக்' டெலிஸ்போனில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்தான். சற்று நேரத்தில் அந்த டெலிபோன் 'பூத்'தினருகில் ஒரு போலீஸ் லாரி வந்து நின்றது. அதில் வேகமாகத் தாவி ஏறிக்கொண்ட சிங்காரம் நேரே பரங்கியூர் ஜமீன்தார் பங்களாவுக்குக் காரை விடச் சொன்னான்.

லாரி பங்களாவைச் சத்தமில்லாமல் நெருங்கி நின்றது. சில கான்ஸ்டேபிள்களை மட்டும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான் சிங்காரம். வெளியே இருந்து வரும் சிங்காரத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார் ஜமீன்தார். அவனை ஒரு மந்திரக்காரன் என்று எண்ணி வியந்து பயந்தார்.

"பின்னால் விவரமாகச் சொல்கிறேன், ஜமீன்தார் சார்!" என்று கூறிவிட்டு கான்ஸ்டேபிள்களை லாரியின் முன்னால் ஜாக்கிரதையாகக் காவல் இருக்கும்படி சொல்லி சிங்காரம் வேகமாக வெளியே சென்று லாரியில் ஏறிக்கொண்டான்.

சிங்காரத்தின் கட்டளைப்படி லாரி பிசாசு மண்டபத்தை அடைந்தது.

பங்களாவின் முன்னால் சிலரை நிறுத்திவிட்டுச் சில கான்ஸ்டேபிள்களுடன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த சிங்காரம் திடுக்கிட்டான். ஆள் சந்தடியே அங்கே காணப்படவில்லை! தப்பித்து ஓடிவிட்டார்களோ என்று மூலைமுடுக்குகளில் பார்த்தான். சிலைக்கு அருகில் ஒரு மூலையில் அந்த நாலைந்து திருடர்களும் பதுங்கி இருந்தனர்.

திடீரென்று போலிஸ்காரர்களைத் தாக்கினார்கள் திருடர்கள். சிறிது நேரம் மும்முரமாகக் கைகலப்பு ஏற்பட்டது. சிங்காரம் தன் பாக்கெட்டிலிருந்து 'விசிலை' எடுத்து ஊதினான். வெளியே நின்றிருந்த போலீஸ்காரர்கள் ஏதோ ஆபத்து என்று ஓடிவந்தார்கள். சிங்காரத்தைப் பின்னாலிருந்து தாக்க ஒருவன் தடியைத் தலைக்கு நேரே ஓங்கினான்!

அடுத்த கணம் ஓங்கிய அவன் கையை நோக்கிப் பாய்ந்தது துப்பாக்கிக் குண்டு. அந்த முரடன் தடியைக் கீழே போட்டுவிட்டு 'ஆ' வென்று அலறியபடியே குண்டு பட்ட கையைப் பிடித்துக்கொண்டான்! வேதனையால் அவன் கை விரல்கள் துடித்தன. முகம் விகாரமாக மாறியது. மறுபடி தாக்க எண்ணுவதற்குள் அவன் கையிலே விலங்கு ஏறியது!

சிங்காரம் அவர்களை லாரியில் ஏற்றிக்கொண்டு போகச்சொல்லிவிட்டு அங்கேயே நின்றான். லாரி கண்களுக்கு மறைந்ததும், சிலையருகில் சென்று சிலையினுள்ளே கையை விட்டான். அவன் தேடிய பொருள் அங்கே பத்திரமாக இருந்தது. அதை எடுத்துக்கொண்டு சுரங்க வழியே சென்று ஜமீன்தார் பங்களாவை அடைந்தான் சிங்காரம்.

ஜமீன்தாரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினான்.

## 14

கோர்ட்டில் அன்று ஏகக் கூட்டமாக இருந்தது. எள் போட்டால் எண்ணெய்தான் இறங்கும். ஜனங்கள் ஜன்னல் வழியிலும் வாயிற்படியினருகில் நின்றும் விவாதத்தை ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

கைதிக் கூண்டிலே நல்ல திடகாத்திரமாக நின்றுகொண்டிருந்தான் கருடா சிங்; கருடனைப்போல் அவனுடைய நீண்டு வளைந்த கூரிய மூக்கும் அடர்ந்து வளர்ந்திருந்த மீசையும் கோவைப்பழத்தைப் போலச் சிவந்த கண்களும் எல்லாரையும் கலங்க அடித்தன.

விவாதம் முடிய மணி நான்காகிவிட்டது! ஜட்ஜ் தீர்ப்பை எழுதுவதற்குத் தம் அறைக்குச் சென்றார். மணி ஓடிக்கொண்டிருந்தது.

ஜட்ஜ் வெளியே வந்து தமது இடத்தில் அமர்ந்து கொண்டார். ஜட்ஜ் தொண்டையைக் கனைத்தபடி, "வாதப் பிரதிவாதங்களை ஒட்டியும் சாட்சிகளின் வாக்குமூலங்களைக் கொண்டும் நான் எழுதிய தீர்ப்பைப் படிக்கிறேன்.

"பல கொள்ளைகளுக்கும் கொலை

களுக்கும் காரணமாக இருந்த கருடாசிங்கிற்கு ஆயுள் தண்டனையும், அவனுக்கு உடந்தையாக இருந்துவந்த காளி, இடும்பன், மாயாண்டி ஆகிய மூவருக்கும் பத்து வருடச் சிறைத்தண்டனையும், நாகசாமி, சங்கரன் ஆகிய இருவரும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்வதோடு, சூழ்நிலை காரணமாகவே திருடர்களானார்கள் என்று திரு. சிங்காரம் அவர்களால் நிரூபிக்கப்பட்டதால் அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து விடுதலை அளிக்கவும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. தீர்ப்பைக் கேட்டதும் கருடாசிங்கின் முகம் கறுத்துப் பயங்கரமாக மாறியது! அதைக் கவனித்த சதாசிவம் மேலும் இரண்டு கான்ஸ்டேபிள்களைக் கருடாசிங்கின் அருகில் இருக்கும்படி அனுப்பி, சிறைக்கு அழைத்துச் செல்லச் சைகை செய்தார். கையில் விலங்கு மாட்டப்பட்டிருந்ததால் எதுவும் செய்ய முடியவில்லை!

அபராதத் தொகை செலுத்தப்பட்டு நாகசாமியும் சங்கரனும் விடுதலை பெற்றனர்.

ஃ * *

அன்றிரவு சிங்காரம், சதாசிவம், சங்கரன், நாகசாமி ஆகிய நான்கு பேர்களும் வீட்டில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். சிங்காரம், சுரங்க வழியில் கருடாசிங்கைப் பிடித்ததுமுதல் தனியாக நாகசாமி, சங்கரனைச் சந்தித்தது வரையில் விவரமாகக் கூறினான்.



பிறகு, "நாகசாமி, உனக்கு அமுதனின் அப்பா சுவாமிநாதனைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று கேட்டான் சிங்காரம். நாகசாமி, "ஆமாம் சிங்காரம். நான் போன வாரம் தஞ்சாவூரில் பிரகதீசுவரர் கோயிலில் அமுதனின் அம்மாவையும் சாந்தாவையும் பார்த்தேன். அமுதனை நீங்கள் எங்காவது சந்தித்தீர்களா? அவன் உயிருடன் இருக்கிறானா? அவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்!" என்று தொண்டை அடைக்கக் கூறினான்.

சிங்காரம் சிரித்தபடியே, "நேற்றுக்கூட அவனை நான் சந்தித்தேன். அவனால்தானே உங்களைப் பற்றி நான் தெரிந்துகொண்டேன்! அவனுக்குத் தன் பெற்றோரைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு இருக்கிறது! ஆனால் உத்தியோக அலுவல்கள் அவனை அசைய விடவில்லை. பாவம்!" என்றான்.

சங்கரன், "நாங்கள் அமுதனை உடனே பார்க்க வேண்டும்!" என்று கேட்டான்.

"அவனிடம் கட்டாயமாக நான் உங்களை அழைத்துக்கொண்டு போகிறேன். முதலில் உங்களை உங்கள் பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும்!" என்று கூறினான் சிங்காரம்.

சதாசிவம் எல்லாவற்றையும் மௌனமாகவே கேட்டுக்கொண்டு இருந்தார்.

* * *

மறுநாள் காலை சிங்காரம், நாகசாமி, சங்கரன் இரண்டு பேர்களையும் காரில் ஏற்றிக்கொண்டு மறையூரை நோக்கிச் செலுத்தினான். கார் வேகமாகச் சென்றது. திருப்பங்களில்கூட நிதானமாகச் செல்லவில்லை. சங்கரனுக்கும் நாகசாமிக்கும் அது திகிலை அளித்தது! இருவரும் தங்கள் பெற்றோரைக் காணப்போகிறோம் என்ற ஆனந்தத்தில் திளைத்தனர்.

கார் திடீரென்று நிலைசாய்ந்தபடி ஓடவே, காரை நிறுத்தினான். காரின் பின்பக்கச் சக்கரம் 'பஞ்சர்' ஆகியிருந்தது. சிங்காரம் 'அடடா' என்று முணுமுணுத்தபடியே 'ஜாக்கி'யைப் போட்டு காரின் டயரைக் கழற்றினான். நாகசாமியும் சங்கரனும் உதவி செய்தார்கள். சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு காருக்கு டயரை மாட்டினார்கள்.

கார் வேகமாக மறையூர் வீதி வழியாகச் சென்றது. குளக்கரையின் திருப்பத்தில் வேகமாகத் திரும்பியபோது எவரும் எதிர்பாராத வகையில் ஓர் உருவம் திடீரென்று காரின் குறுக்கே பாய்ந்தது! கண்ணிமைக்கும் நேரத்தில் இவை நடந்தது; ஆனாலும் சிங்காரம் பிரேக்குக் கட்டையைத் தன் பலங்கொண்டமட்டும் அழுத்தி நிறுத்தினான். அப்படி இருந்தும் கார் அந்த உருவத்தை மோதிக் கீழே தள்ளிவிட்டே நின்றது! மோதியவுடன், "ஐயோ!" என்று அலறியபடி சாய்ந்தது அந்த உருவம். சிங்காரத்திற்கும் நெற்றியில் பலமாக அடிபட்டது. அதிலிருந்து கசியும் ரத்தத்தைத் துடைத்தபடியே கீழே இறங்கி அடிபட்ட உருவத்தைத் தூக்கி காரில் போட்டான். நாகசாமியைக் கீழே இறக்கிவிட்டு யாராவது வந்தால் கிருஷ்ணா டிஸ்பென்சரிக்கு அழைத்துக்கொண்டு வரும்படிச் சொல்லிவிட்டு டிஸ்பென்சரியை நோக்கிக் காரைச் செலுத்தினான் சிங்காரம். அதற்குள் கூட்டம் கூடிவிட்டது; சிலர் சிங்காரத்தைக் கண்டபடி திட்ட ஆரம்பித்தனர். சிலர் கிருஷ்ணா டிஸ்பென்சரியை நோக்கிச் சென்றார்கள்.

கூட்டத்தோடு கூட்டமாக நின்றுகொண்டிருந்த நாகசாமியைச் சிலர் காரணம் கேட்க ஆரம்பித்துவிட்டனர். நாகசாமியும் பொறுமையாகக் காரணத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு வயசான அம்மாள் அழுதுகொண்டே ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தாள். நாகசாமி, "அம்மா, உங்கள் பையனைத் தூக்கிக்கொண்டு டிஸ்பென்சரிக்குப் போயிருக்கிறார்கள். வாருங்கள், போகலாம்!" என்று துரிதப்படுத்தி அந்த அம்மாளை அழைத்துக்கொண்டு டிஸ்பென்ஸரியை அடைந்தான். டிஸ்பென்ஸரி வாசலில் ஒரே கூட்டம். (தொடரும்)

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

N. 329. நடராஜன், புது டில்லி. 330. நடராஜன், M., மேட்டுப்பாளையம். 331. நரசிம்மன், S. L., விருத்தாசலம். 332. நமச்சிவாயம், A., சென்னை-15. 333. நரசிம்மன், K., திருச்சி. 334. நௌபர், S. M., இலங்கை. 335. நாகராஜன், A., சென்னை. 336. நாராயணசாமி, K., சேத்தி. 337. நரசிம்மன், V., போத்தனூர். 338. நடராஜன், G., கலக்காடு. 339. நாராயணன், S. M., (விலாசம் இல்லை) 340. நித்தியாநந்தன், N., யாழ்ப்பாணம். 341. நூல்நிலயம், V. O. C., கூடலூர். 342. நரசிம்மன், M. S., சேலம். 343. நாகராஜன், C., திருச்சி. 344. நிஜாமுதீன், P. A., தாஜுதீன், T. A., தஞ்சாவூர். 345. நரசிம்மன், K. S., திருவாரூர். 346. நாகரத்தினம், T. S., ஆர்ப்பாக்கம். 347. நாராயணன், C.R., சுவாமிநாதன், C. R., சென்னை-4. 348. நாகராஜன், O., ராமதாஸ்., சென்னை-21. 349. நடராஜன், R., திருப்பூர். 350. நாகராஜன், S., மூர்த்தியம்பாளையம். 351. நாகப்பிள்ளை, M. R., எட்டரை. 352. நாராயணன், G., சென்னை - 17. 353. நிர்மலா, N., பூந்தமல்லி. 354. நவநீதகோபால்,N., ஈரோடு. 355. நரசிம்மன், K.S., மதுராந்தகம். 356. நடராஜன், M. P., மேட்டூர் அணை. 357. நடேசன், S. S., கடலூர் N. T. 358. நடராஜன், K. S., திருநெல்வேலி. 359. நிர்மலா, C., மதுரை. 360. நடராஜன், V., திருவண்ணாமலை. 361. நடராஜன். T. R., கீரனூர். 362. நம்பிராஜ், T., அங்குடை; 363. நாராயணன், N., கண்டனூர். 364. நாகலட்சுமி, S., சென்னை-5. 365. நாராயணன், S., ராமநாதபுரம். 366. நந்தகுமார், G., கோயம்புத்தூர். 367. நடராஜன், K., சீகாழி. 368. நவநீதன், M. S., திருத்தருப்பூண்டி. 369. நடராஜன், O.P., சென்னை-17. 370. நாராயணசாமி, M. V., சென்னை-17. 371. நடராஜன், R., ஆரணி. 372. நடராஜன், R., குடவாசல். 373. நாச்சம்மாள்., காணப்பட்டி. 374. நடராஜன், V.R., வைரிசெட்டி பாளையம். 375. நாராயணன், A., புதுவை. 376. நாகமுத்து, P., ஸ்ரீரங்கம். 377. நாகராஜன், V., நன்னிலம். 378. நீலகண்டன்,G., சென்னை-4. 379. நகுலேச்வரி, A., கண்டி. 380. நாகராஜன், S., நாகர்கோயில். 381. நாகராஜன், A.,

இங்கே கத்தரிக்கவும்

## கண்ணன் கழகம்

### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ..............................

விலாசம் ..............................

..............................

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

ஏப்ரல், 15-'56 கூபன் நெ.

மாம்பலம், சென்னை. 382. நடராஜன், T. R., திருமங்கலம். 383. நாராயணன், T. S., கொல்லம். 384. நவஜோதி,K.,யாழ்ப்பாணம். 385. நாராயணசாமி, R., யாழ்ப்பாணம். 387. நாராயணன், R., கோனேரிராஜபுரம். 388. நாகூர் அபிஎம், M., இலங்கை. 389. நாதன், S. P., பழனி. 390. நிர்மலா, M. C, சென்னை-5. 391. நாராயணன், S., அசோக் S., சென்னை-4. 392. நாராயணன், K, புதுக்கோட்டை. 393. நாதர் கனி, N., நாகூர். 394. நடராஜன். T., பொள்ளாச்சி. 395. நாச்சிமுத்து, D., கரூர். 396. நரசிம்மன், N., சென்னை-14. 397. நடராஜன், D., சென்னை-1. 398. நாராயணன், S., மன்னார்குடி.. 399. நடராஜன், கரூர். 400. நாராயணன்,G., சென்னை-17. 401 நமச்சிவாயம்,S., சங்கரன்கோயில். 402. நரசிம்மன், R.L.,சென்னை-5.

★★★★★★★★★★★★★★

# கண்ணன்

## கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள்

தொடர்ந்து மூன்று கூபன்

கள் அனுப்பவேண்டும்.

பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★

403. நடராஜன், R., சென்னை-1. 404. நவீனராம், S., பங்களூர்-4. 405. நாகராஜன். G., கோயம்புத்தூர். 406. நாராயணன், K., போர்டிக்ஸன். 407. நாகமுத்து,P., ஸ்ரீரங்கம். 408. நடராஜன், K., சிங்கப்பூர். 409. நாராயணன், A. R., கொத்தமங்கலம். 410. நிர்மலாதேவி, S., உடுமலைப்பேட்டை. 411. நாதன், M. R., புதுச்சேரி. 412. நாகராஜன், P. R., பண்ருட்டி. 413. நாகசுப்பிரமணியன், S., மதுரை. 414. நாதன், N. S., திருவாரூர். 415. நாராயணன், R., திருத்தருப்பூண்டி. 416. நடராஜன், M., கீவளூர். 417. நாராயணன், S. R., பூனா-2. 418. நம்மாழ்வார், B. R., சென்னை-21. 419. நரசிம்மன், K. S., சென்னை-4. 420. நாகராஜன், T., பாரூர். 421. நாகராஜா, N., யாழ்ப்பாணம். 422. நூர்தீன், M. M., கொழும்பு-10. 423. நாராயணன், P., (விலாசம் இல்லை.) 424. நடேசன், K. S., கொடுமுடி. 425. நடராஜா, K, யாழ்ப்பாணம். இலங்கை. 426. நடராஜன், V.M., மணி, V. M., புதூர். 427. நாராயணன். N. S. S., சென்னை-11. 428. நெல்லையப்பன், G., மதுரை. 429. நளினி, S., பரமக்குடி. 430. நாராயணன், K., புதுக்கோட்டை. 431. நூர்ஜஹான், N, மதுரை. 433. நாகமணி, R., சென்னை-4. 434. நாதன், R. J., சிவகங்கை. 435. நாகராஜன், R., சென்னை-4. 436. நாராயணன்,G., ஊஞ்சலூர். 437. நாகராஜன்,V.,வேப்பத்தூர். 438. நடராஜன், R., ஹேமலதா, வெங்கடேசன், R,, சென்னை-4. 439. நடனசபாபதி, S., சிந்தாதிரிப்பேட்டை. 440. நாராயணசாமி, S., திருப்பூர். 441. நீலகண்டன், G., சென்னை-4. 442. நரசிம்மன், M. S., சேலம்டவுன்.

(மீதி அடுத்த இதழில்)

# சோழனைக் காத்த மோசியார்

**கி. வா. ஜகந்நாதன்**

யானை வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. வீரர்கள் பலர் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். கையில் வாளை எடுத்துக் கொண்டு அவர்கள் ஓடிவந்தார்கள். ஒரே ஆரவாரம். யானையின்மேலே இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள். ஒருவனைப் பார்த்தால் யானைப் பாகன் என்று நன்றாகத் தெரிந்தது. அவன்தான் முன்னால் உட்கார்ந்திருந்தான். பின்னால் இருந்தவன் ஒளி வீசும் முகமும் ஆடையணிகளும் அணிந்திருந்தான். அவன் அரசனாக இருக்க வேண்டும். யானைப்பாகன் அங்குசத்தால் யானையின் மத்தகத்தில் கொத்தினான். அது அடங்கவில்லை, பிளிறிக்கொண்டே ஓடியது. பின்னாலே ஓடிவந்த வீரர்கள் அந்த யானையைத் துரத்திக்கொண்டு வந்தார்கள் என்றே தோன்றியது. அவர்கள் எதற்காக அதைத் துரத்த வேண்டும்? யானையின்மேல் இருந்தவர்கள் யார்? துரத்துகிறவர்களுக்கு விரோதிகளா?

பார்க்கிறவர்கள் எல்லோருக்கும் இந்தச் சந்தேகங்கள் உண்டாயினவோ, என்னவோ தெரியாது. நெடுந்தூரத்தில் வரும் யானையையும் வாள்பிடித்தவர்களுடைய கூட்டத்தையும் கண்டு சேர அரசன் பலவகையான சந்தேகங்களைக் கொண்டான்.

திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதியாக இன்று உறையூர் இருக்கிறது. பழங்காலத்தில் அதுதான் பெரிய நகரமாகவும் திருச்சிராப்பள்ளி அதன் பகுதியாகவும் இருந்தன. சோழ அரசர்களின் தலைநகரம் உறையூர். முதல் முதலில் கரிகாலன் என்ற சோழ சக்கரவர்த்தி உறையூரையும் பெரிய நகரமாக்கி அங்கே இருந்து செங்கோல் செலுத்தி வந்தான். பிறகு அதுவே சோழ ராசதானி நகரமாக விளங்கியது. அங்கு இந்தக் கதை நடந்த காலத்தில் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழன் அரசாண்டு வந்தான்.

அவன் காலத்தில் இருந்த சேரன் அந்துவஞ் சேரல் இரும்பொறை என்பவன். அவன் தன் வீரத்தால் சேர நாட்டை விரிவாக்கினான். மலையாளம், கொச்சி, திருவாங்கூர் என்று வழங்கும் கேரள ராஜ்யந்தான் சேரநாடு. அதன் தலைநகரம் வஞ்சி. அந்துவன் தன் படைப் பலங்கொண்டு மலைநாட்டுக்கு மேற்கே உள்ள கொங்கு நாட்டையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். கொங்கு நாட்டின் கிழக்கு எல்லையில் கருவூர் என்ற நகரம் இருக்கிறது. இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சேர்ந்திருக்கிறது. அந்த நகரத்தில் சேரன் ஓர் அரண்மனை கட்டினான். சிலகாலம் கருவூருக்கு வந்து அந்த அரண்மனையில் தங்குவான். அரண்மனையில் மேலே அவனுடைய அரசிக்குரிய மாளிகை இருந்தது.

ஒரு சமயம் அந்துவன் கருவூருக்கு வந்து தங்கியபோதுதான் இந்த நிகழ்ச்சி நடந்தது. அவன் அரசியின் மாளிகையின்மேல் மாடத்தில் திறந்த வெளியில் கிழக்கு நோக்கி நின்றுகொண்டிருந்தான். அவனுடன் மோசியார் என்ற புலவரும் இருந்தார். அவர் முடவராதலால் முடமோசியார் என்று சொல்வார்கள். முடம் என்பதை யாரும் குறைவாக நினைக்காமல் அவரிடம் தமிழ் மக்கள் மதிப்பு வைத்துப் பாராட்டினார்கள். அவரும் சேர அரசனோடு அங்கே இருந்தார்.

அந்துவன் நெடுந்தூரத்தில் ஒரு யானை வேகமாக ஓடிவருவதையும் அதற்குப் பின்னால் ஆயுதபாணிகளாகப் பலர் வருவதையும் கண்டான். கருவூரின்மேல் யாராவது

படையெடுக்க வந்துவிட்டார்களா? யானையின்மேல் இருப்பவன் யார்? எதற்காகத் துரத்துகிறார்கள்?-சேர அரசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

அருகில் இருந்த புலவர் மோசியாரைப் பார்த்து, ''அதோ பாருங்கள் யானையை அதன்மேல் யாரோ இருவர் இருக்கிறார்கள். யாரோ தெரியவில்லையே!'' என்றான். புலவர் பார்த்தார். அவருக்கு உண்மை விளங்கிவிட்டது. யானை உறையூரிலிருந்து வருகிறது என்பதை உணர்ந்துகொண்டார்.

புலவர் முடமோசியாரும் உறையூரில் வாழ்கிறவர். பெரிய நகரங்களில் மேலே ஏறிப் பார்த்தால் ஊர் முழுவதும் நன்றாகத் தெரிவதற்குரிய கோபுரம் ஒன்று இருக்கும். அதை நகர் காண் ஏணி என்பார்கள். உறையூரில் அந்த ஏணி இருந்த இடத்தை ஏணிச்சேரி என்று சொன்னார்கள். அவ்விடத்தில் மோசியார் வாழ்ந்து வந்தார். அரசர்களுக்குள் நட்பானாலும் பகையானாலும் புலவர்களிடம அதைக் காட்டமாட்டார்கள். போர் நடந்து கொண்டிருந்தாலும் புலவர்கள் ஒரு நாட்டிலிருந்து அதற்குப் பகையான நாட்டுக்குப் போவார்கள். அவர்களை யாரும் ஏதும் செய்யமாட்டார்கள். தமிழ்ப் புலவர்களிடம் அக்காலத்து மன்னர்களுக்கும் மக்களுக்கும் அவ்வளவு மதிப்பு இருந்து வந்தது.

கோப்பெருநற்கிள்ளியென்னும் சோழன் வழக்கம் போல் அன்று பட்டத்து யானையின்மேல் ஏறி ஊர்வலம் வந்தான். திடீரென்று யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அது வேகமாக மேற்குத் திசையில் ஓடத் தொடங்கியது. யானையின் மேல் பாகனும் சோழனும் அமர்ந்திருந்தார்கள். யானை கட்டுக்கு அடங்காமல் ஓடுவதைக் கண்டு உடன் இருந்த வீரர்கள் ஆயுதமும் கையுமாக அதைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். ஓடிப்போய் இளைத்துப் போனார்கள். ஆயினும் அங்கங்கே இருந்த மக்கள் வாளோடும் வேலோடும் துரத்திச் சென்றார்கள். யானை சோழநாட்டு எல்லையையே கடந்து சென்றுவிட்டது. சேரநாட்டைச் சார்ந்திருந்த கருவூர் எல்லைக்குள் புகுந்தது. அப்போதுதான் சேர அரசன் பார்த்தான்.

உறையூர்க்காரராகிய புலவர் முடமோசியாருக்கு யானையின் மேல் இருப்பவன் சோழன் என்று தெரிந்துவிட்டது. யானையின் நிலையைக் கண்டு, அது மதம் பிடித்து ஓடி வருகிறது என்பதையும் உணர்ந்து கொண்டார்.

சேரனும் சோழனும் நண்பர்களாகப் பழகாத காலம் அது. வேற்று அரசன் அழைப்பு இன்றியும் காரணம் இன்றியும் அயல் நாட்டில் புகுவது முறையன்று. சோழனோ வாள் வீரர்களோடு வருகிறான். அந்த நிலையில் நிச்சயமாகச் சேரமன்னன் அவனைக் கைப்பற்றிச் சிறையில் அடைத்துவிடுவான். அப்படிச் செய்வது அரசியலின்படி தவறான காரியம் அல்ல.

முடமோசியார் சோழனைக் காப்பாற்ற வேண்டும் என்று நிச்சயம் செய்துகொண்டார். சேரன், ''இவன் யாரோ?'' என்று கேட்ட



போது மோகியார் விடை கூற வில்லை. யானையையும் அதன்மேல் இருந்தவரையும் உற்றுப் பார்த்தார். மறுபடியும் சேரன், ''யார் என்று தெரிகிறதா?'' என்று கேட்டான்.

''பாவம்! தர்மசங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான் இவன். புலித் தோலால் செய்த சட்டையை அணிந்திருக்கிறான். அதில் அம்புபட்ட தொளைகள் இருக்கின்றன. இவன் உண்மையான வீரன்.''

''இங்கே எதற்கு வருகிறான்? பின்னாலே ஆயுதங்களோடு வருகிறவர்கள் யார்?''

''பெரிய கடலிலே கப்பல் வருகிறதுபோல வருகிற இந்தக் களிறு இயற்கையான நிலையில் இல்லை. அதற்கு மதம் பிடித்திருக்கிறது. அதைத் தடுத்து வசப்படுத்துவதற்காக அந்த வீரர்கள் வருகிறார்கள். அவர்களால் அடக்க முடியவில்லை. வேண்டுமென்று இவன் இங்கே வரவில்லை பாவம்! அயல் நாடு என்று தெரிந்தும் இந்த நிலையில் அவன் என்ன செய்வான்! அவனுக்கு ஒரு தீங்கும் வராமல் சௌக்கியமாக ஊருக்குப் போய்ச் சேரவேண்டும்.''

''அவன் ஊர் எது?''

''எங்கே பார்த்தாலும் வயல்கள் பரந்து கிடக்கும் சோழ நாட்டுக்கு உரியவன் அவன். உறையூரிலிருந்து யானை அவனை இங்கே தூக்கிக் கொண்டு வந்துவிட்டது.



"அப்படி யென்றால் இவன் சோழ...."

"ஆம்; சோழ அரசன் கோப்பெரு நற்கிள்ளிதான்."

சேரன் நிமிர்ந்து நின்று பார்த்தான். சற்றே கனைத்துக்கொண்டான். "உங்களுக்குத் தெளிவாகத் தெரியுமா?" என்றான்.

"உறையூர்க்காரனாகிய எனக்குத் தெரியாதா? கருவூருக்குள் முறை தவறி வரக்கூடியவன் அல்ல. யமன் கையில் பட்ட உயிரைப்போல இந்த யானையினிடம் அகப்பட்டுக் கொண்டான். சேர மன்னருடைய எல்லைக்குள்ளே வந்துவிட்ட செய்தியை அவன் அறிந்தானோ அறியவில்லையோ, யான் அறியேன். ஏதோ அவனுக்குப் போதாத காலம். நல்ல வேளையாக இப்போது மன்னர்பெருமான் இங்கே நின்று இவனைப் பார்க்கும் சமயமாக இருக்கிறது, வஞ்சிமா நகரத்தில் தாங்கள் இருக்கும்போது இப்படி நேர்ந்தால் இவனை இங்குள்ள அதிகாரிகள் எளிதில் விட்டுவிடுவார்களா? தம்முடைய ஆற்றலுக்கு மேற்பட்ட சங்கடமான நிலை இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நிகழ்வது உண்டு. அப்படி நேரும்போது மற்றவர்கள் பெருந்தன்மையோடு நடந்துகொண்டால் அந்தச் சமயங்களில் கேடு இல்லாமல் தப்பலாம். சோழன் யாதொரு கேடும் இன்றி ஊருக்குத் திரும்பிப் போய்ச் சேருவான் என்றே நான் நம்புகிறேன்" என்று பேசி முடித்தார் மோசியார்.

புலவருடைய குறிப்பு இன்னதென்பதை அறிவாளியாகிய அந்த வஞ் சேரல் உணர்ந்துகொண்டான். தக்க வீரர்களை அனுப்பி யானையை அடக்கச் செய்து, சோழனை அழைத்துவரச் செய்தான். சேரன் அவனை வரவேற்றான். உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும் இருந்து புன்னகையுடன் வரவேற்றார்.

'அயல்நாட்டுக்குள் முறையின்றி வந்து விட்டோமே! என்ன ஆகுமோ!' என்று அஞ்சிக் கிடந்த சோழனுக்கு முடமோசியாரைக் கண்டவுடன் உயிர் வந்தது. தனக்கு எந்தவிதமான இடையூறும் நேராது என்ற நம்பிக்கை தோன்றியது.

அது உண்மையாயிற்று. ஒரு நாள் சேரனுடைய விருந்தாளியாக இருந்த சோழன் மறுநாளே உறையூர் போய்ச் சேர்ந்தான். சேர்ந்தது முதல், முடமோசியார் எப்போது வருவார், எப்போது வருவார் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தான். அவரால் உயிர்பிழைத்தவன் அல்லவா? தன் நன்றியறிவை அவருக்குக் காட்ட வேண்டாமா?

## எதில் முடிச்சு விழும்?



இதோ நாலு விதமான முடிச்சுகள் தெரிகின்றன. எல்லாம் முடிபோட்டிருப்பதுபோல் தெரிந்தாலும் இரண்டுதான் முடிச்சாக விழும். அவைகளைக் கண்டுபிடியுங்கள். தெரியாவிட்டால் 34-ஆம் பக்கத்தில் பாருங்கள்.



# யானைக்குட்டி சவாரி

என். வி. நடராஜன்

அமரபுரி அரசன் அனந்த வர்மனின் ஒரே புதல்வி சிறுமி பார்வதி. அரண்மனையிலும் அந்தப்புரத்திலும் அவள் உத்தரவே அரசனின் உத்தரவு என்றிருந்தது. அந்தச் சமயம் அரண்மனை யானை லட்சுமி, குட்டி ஒன்று போட்டது. அரண்மனையில் ஒரே கோலாகலம். சிறுமி பார்வதி அடைந்த சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. அவள் யானைக் குட்டிக்கு 'ராஜா' என்று பெயரிட்டாள்.

ராஜா எப்போதும் அரண்மனை அந்தப்புரத்தில் சிறுமி பார்வதி விளையாடும் இடத்தில் கட்டப்பட்டிருக்கும். தினம் காலை எழுந்தவுடன் பார்வதி உப்பரிகையிலிருந்து, 'ராஜா!' என்று அன்புடன் அழைப்பாள். ராஜாவும் தன் முன்னங் கால்களை மண்டியிட்டு தும்பிக்கையைத் தூக்கி வணங்கி நிற்கும். இதைப் பார்த்துப் பார்வதி ஓடி வந்து ராஜாவைத் தட்டிக் கொடுத்து, அதன்மேல் ஏறி உட்கார்ந்து கொள்வாள். யானைக்குட்டியும் அரண்மனைத் தோட்டத்தைச் சுற்றி வரும். பார்வதிக்கு இது ஒரு பெரிய விளையாட்டு.

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் இரவு அரசிளங்குமாரி ராஜாவை நன்ருக அலங்கரிக்கச் சொல்வாள். பிறகு அதன் மேல் அமர்ந்து அரண்மனை நான்கு வீதி வழியாகவும் நிலவில் பவனி வருவாள். அது மட்டுமா? யானைக்குட்டி மேல் அமர்ந்து பார்வதி பின் செல்ல, அவளுக்கு முன்னல் அரண்மனை சிப்பாய்கள் குதிரை மேல் அமர்ந்து, வழியில் ஆங்காங்கு நிற்கும் சிறுவர் சிறுமியர்களுக்கு லட்டு, ஜிலேபி முதலிய தின்பண்டங்களை வழங்குவார்கள். நகர மக்கள் இதைத் திருநாளாகக் கொண்டாடுவார்கள்.

பௌர்ணமி அன்று ஒரு நாள் பார்வதி ராஜாவின் மீது அமர்ந்து அரண்மனைச் சிப்பாய்கள் சூழ, பவனி வந்தாள். வழக்கம் போல் சிப்பாய்கள் தின்பண்டங்கள் வழங்க, அந்தக் கும்பலில் உள்ள ஒரு குழந்தையாவது இனிப்புப் பண்டத்தை வாங்கிக் கொள்ளவில்லை. சிப்பாய்களில் ஒருவன் அங்கே நிற்கும் முத்து என்ற சிறுவனைப் பார்த்து, ''அலட்சியம் செய்யாமல் வாங்கிக்கொள், தம்பி'' என்ருன்.

உடனே அந்தச் சிறுவன், ''யாருக்கு வேண்டும் உங்கள் தின்பண்டம்? உங்கள் ராஜ குமாரிக்கே கொடுங்கள். பாவம்! அவளுக்குத்தான் பசியாயிருக்கும்!'' என்ருன். குமாரி பார்வதி இறங்கி வந்து, ''ஏன்! உனக்குத் தின்பண்டம் வேண்டாமா? ஏன் வாங்கிக்கொள்ள மாட்டேன் என்கிருய்?'' என்று கேட்டாள்.

முத்து உடனே கோபமாக, ''உனக்குப் பதில் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. வாருங்கள் நாம் போகலாம்'' என்று சொல்லிவிட்டு ஓடிஞன். என்ன

## விடைகள் :

எதில் முடிச்சுவிழும் : 2, 3.

வம்சாவளி : கடைசி வரிசையில் 5-ஆவது பையன்.

அதிசயம்! அத்தனை குழந்தைகளும் ஓடிப் போயவிட்டார்கள்.

நேராக அரண்மனைக்கு வந்து தந்தையிடமும் தாயிடமும் நடந்ததைச் சொல்லி மிகவும் வருத்தப்பட்டாள் அவள். எதற்காக வருத்தப் பட்டாள் தெரியுமா? அவர்கள் தின் பண்டம் வாங்கிக் கொள்ளாமலேயே போய்விட்டார்களே என்று நினைத்துத்தான்.

அன்றிரவு, யாருக்கும் தெரியாமல் அந்தப்புரத்திலிருந்து கிளம்பி, விசாரித்துக்கொண்டு முத்து வீட்டு வாசலுக்கு வந்து விட்டாள் பார்வதி. வீட்டின் உள்ளே ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. ஜன்னல் வழியே வீட்டின் உள்ளே அகல் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது தெரிந்தது. வயதான கிழவர் ஒருவர் கட்டிலில் அமர்ந்து, எதிரில் கைகட்டி நிற்கும் முத்துவைப் பார்த்துக் கேட்டார்:

''முத்து நீ இப்படிச் செய்தது ரொம்பத் தப்பு. நம் ராஜகுமாரியிடம் இப்படித்தானா பேசுவதா? பழசகமாகக் கொடுக்கிற தின்பண்டத்தை வாங்கினால் என்னவாம்?''

''வாங்கிக்கலாம், தாத்தா, ஆனால் நம்ப நகரத்திலே உள்ள அத்தனை குழந்தைகளும் ஆசைப்படறாங்களே, அவுத



எப்படித் தாத்தா நிறைவேற்ற முடியும்?''

''என்ன ஆசை?''

''ஒண்ணுமில்லை, தாத்தா. ஒரே ஒரு ஆசை!''

''என்னது?''

''வந்து தாத்தா, அந்தச் சின்ன யானைக்குட்டி ராஜா மேலே ஏறிக்கொண்டு நாங்களும் நாலு வீதியும் சுத்தி வரணும்னுதான். ராஜகுமாரி மட்டும்தான் வரலாமா? அவள் மாத்திரம் என்ன உசத்தியாப்?''

''முத்து! நீ இப்படியெல்லாம் பேசறது கொஞ்சங்கூட நல்லாயில்லே. யார் காதிலேயாவது பட்டா ...''

''படட்டுமே தாத்தா. எங்களுக்கும் யானைக்குட்டி மேலே சவாரி செய்யணும்னு ஆசை இருக்காதா?''

''அதுக்காக?''

'அதுக்காக நாளை காலையிலே நான் ஒரு பெரிய குழந்தைகள் படையைத் திரட்டிண்டு அரண்மனைக்குப் போயி, நம்ப அரசரைப் பார்த்து, 'எங்கள் ஆசையை நிறைவேற்ற முடியுமா, முடியாதா?'ன்னு கேட்கப் போகிறேன். முடியாதுன்னு, நாங்கள்ளாம் சேர்ந்துண்டு, அந்த யானைக்குட்டி ராஜாவைத் தூக்கிண்டு ஓடியே போயிடுவோம்.''

''நல்லக் குழந்தைகள். யானைக் குட்டியைத் தூக்கிண்டு போயிடுவீங்களா? முத்து, நடக்கிறதாக ஏதாவது பேசு.''

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட பார்வதி அரண்மனைக்குத் திரும்பினுள்.

மறுநாள் பொழுது விடிந்தது. முத்து முன்னே வர ஆயிரக் கணக்கான குழந்தைகள் அரண்மனையை அடைந்தார்கள். ''அரசர் வாழ்க!



## தவழும் கண்ணன்



போட்டோ: புஷ்பத்துறை சுப்பிரமணியம்

அரசரைக் காணவேண்டும்'' என்று கோஷமிட்டார்கள். அரசர் வெளியே வந்து முத்துவைப் பார்த்து, ''தம்பி! என்ன இது! ஏன் கூட்டமாக வந்திருக்கிறீர்கள்? என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

அப்போது அந்தப்புரத்திலிருந்து சிறுமி பார்வதி கையில் ஓர் ஓலைச் சுருளுடன் அங்கே வந்தாள். ''அப்பா, இதை உடனே பறை சாற்றுங்கள்'' என்று தந்தையிடம் கொடுத்தாள். அரசர் அதைப் படித்துப் பார்த்தார். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?

''இன்று முதல் தினம் வீட்டிற்கு ஒரு குழந்தையாக யானைக்குட்டி ராஜா மீது அமர்ந்து நகர முழுவதும் சுற்றி வர ஏற்பாடாகி யிருக்கிறது. இது அரசிளங் குமாரி பார்வதியின் உத்தரவு.''

''முத்து! இந்த ஏற்பாடு சரிதானே?'' என்று அன்பு ததும்ப, புன்னகையுடன் பார்வதி முத்துவைப் பார்த்துக் கேட்டாள். முத்து சந்தோஷப் பட்டான். அவன் மட்டுமா? குழந்தைகள் எல்லாருக்கும் அளவு கடந்த ஆனந்தம்! அரசனும் விஷயம் தெரிந்து சந்தோஷப் பட்டான். யானைக்குட்டி ராஜாவுக்கு அதுமுதல் சரியான வேலை!

---

## மூளைக்கு வேலை



சுப்புசாமிக்கு இப்பொழுது 60 வயதாகிவிட்டது. முன்பெல்லாம் அவர் காலையில் எழுந்ததும் கபாலீசுவரர் கோவில் முன்பு உள்ள பெரிய தெப்பக் குளத்தை ஒரு தரம் வலம் வருவார். இப்பொழுது அவரால் அப்படிச் செய்ய முடிவதில்லை. பாதித் தூரம் வந்ததும் நடக்க முடியவில்லை என்று வந்த வழியே தினமும் வீட்டுக்குத் திரும்பி விடுகிறார். மூன்று மாதமாக இப்படிக் கஷ்டப்படுகிறார். நீங்கள் அவருக்கு ஒரு வழி சொல்லுங்களேன்!

விடை : மூன்றாவது அட்டையில்.

கதை: ஆர்வி

# புலிக்குட்டி

சித்திரம்: சுசி





அந்த ஆடைகளை இப்படிக் கொடு!
குழந்தையின் உடைகளை மாற்றி விடுகிறான். தன் உடைகளையும் மாற்றிக்கொள்கிறான்..
இரவு வந்ததும் பரிசல் கடல்மல்லை என்ற மாமல்லபுரத்தை அடைகிறது. ஒரு புதர் அருகே..



பசிக்கிறது.
நடக்கமுடியவில்லை.
அந்த மரத்தடி
யில் உட்கார்ந்து
சாப்பிடலாம்!
குழந்தை சாப்பிட்டுவிட்டுத்
தூங்குகிறான் களைப்பாக.
ஒரு குதிரை வேண்
டும். இவன் விழிப்பதற்குள்
வர வேண்டும்!
வழியில், ஒரு குதிரை
வீரன் வருகிறான்.
ஐயா,
உங்கள் குதிரையைத்
தர முடியுமா?
பொன் தருகிறேன்.
யார் நீ? உன்னை
எங்கேயோ பார்த்தது போல
இருக்கிறதே!


(தொடரும்.)




## குட்டி நாய்

"ஸ்ரீரஞ்சனி"

சூந்து வீட்டுக் குட்டிநாய்
சொன்ன தெல்லாம் கேட்டிடும்.
பந்து வீசிப் போட்டால் அதைப்
பல்லால் கடித்துத் தூக்கிடும். 1.

ரொட்டியுடன் வெண்ணெய்பால்
ருசித்து ருசித்துச் சாப்பிடும்—கை
தட்டி நீயும் கூப்பிடு!
தாவித் தாவி யேவரும். 2.

வேலே சொன்னால், செய்ய ஓடி
வேகமாகப் போய் வரும்
வாலே ஆட்டி வெகுஅழகாய்
வந்தனமும் சொல்லிடும். 3.

பட்டுப் போல மின்னியே
பளபளக்கும் குட்டிநாய்
கட்டித் தூக்கிக் கொஞ்சவே
கையிரண்டும் துடித்திடும். 4.

கல்லே விட்டுப் போட்டால் அது
கடுமையாகக் குறைத்திடும்
தொல்லே தரும் பையனேயோ
துரத்தித் துரத்தி யடித்திடும். 5.

எங்கள் ஜிம்மிபோல வேறு
எங்குமே கிடைத்திடாது.
நீங்கள் கூட ஜிம்மியுடன்
நிதமும்விளே யாடலாம். 6.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

## கண்ணன் கிளைக் கழகம்

| | | |
|---|---|---|
| திருபாதிரிப்புலியூர் | உபதலைவர் / செயலாளர் | எஸ். சந்திரசேகரன் |
| | பொருளாளர்: வி. சந்திரசேகரன் | |
| | உதவிப் பொருளாளர்: ஜே. வைத்தியநாதன் | |

செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'அரும்பு' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

| | |
|---|---|
| வரதராஜபுரம், திருநெல்வேலி | உபதலைவர்: கே. வி. ராமன் |
| | செயலாளர்: எஸ். ஏ. கிருஷ்ணன் |
| | பொக்கிஷதார்: ஆர். ரங்கன் |

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'மணி' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

| | |
|---|---|
| மகிபாலன்பட்டி (ராமநாதபுரம் ஜில்லா) | உபதலைவர்: மகிபை தமிழரசு |
| | செயலாளர்: வெ. வேங்கடாசலம் |
| | பொருளாளர்: ம. கோபால் |

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. கண்ணன் படிப்பகமும் உடற்பயிற்சி மன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 'முல்லை' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பேனா நண்பர்கள்

1. P. மாயநாதன், c/o பூங்காவனம், 11/12, ஆலிவர் ரோடு, சந்தைவெளித் தெரு, சென்னை-4.

2. V. M. பஜ்லுல்லா, c/o V. ஹாஜி அப்துல் சத்தார் சாயபு, இரும்பு வியாபாரம், கடைத் தெரு, ஆம்பூர். (வ. ஆ.)

3. R. நடராஜன், 1/186, அம்மச்சியார் கோயில் தெரு, வில்லாபுரம், அவனியாபுரம் போஸ்டு, மதுரை ஜில்லா.

4. N. சுந்தரராஜன், 2, மதார்சாப் தெரு, மனவர்த்திப்பேட்டை பெங்களூர் ஸிடி.

5. R. ராஜகோபாலன், c/o K. V. ஐயர், மாமா ரோடு, தரம்பேட், நாகபுரி.

6. M. குணசேகரன், 122, வடக்கு மாசி வீதி, மதுரை.

7. K. V. ஜோதிலால், 6-A, கிருஷ்ணாபுரம் குறுக்கு 1-ஆவது தெரு, மதுரை.

8. K. தியாகராஜன், 71, சின்னக் கடைத் தெரு, திருவண்ணாமலை. (வ. ஆ.)

9. பா. கௌ. மெய்கண்டான், c/o பா. க. கௌரிசங்கர், 80, தேரடித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-17.

10. V. சுப்பையா, செல்லப்பச் செட்டியார் வீதி, நா. புதூர், காரைக்குடி.

11. M. கோவிந்தராஜன், 44, கஸ்துமேட்டுத் தெரு, குயப்பேட்டை. வேலூர். (வ. ஆ)

12. N. செல்வராஜா, 207/2, காலிரோடு, ரட்னலானா, கல்கிசை, இலங்கை.

---

விடை: மூளைக்கு வேலை - பாதிவழி வந்தபிறகு சுற்றியே வந்து விடலாமே!

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 554.

# தயாராகிவிட்டன!

★ **பாரஸீக ரோஜா** - அராபியக் கதை - சித்திரம்: ஸாமி

'பாக்தாத் இளவரசன் அழகனு? சீனத் தீவிலுள்ள ராஜகுமா அழகியா?' என்று ஒரு நாள் இரவு இரண்டு பூதங்களுக்குள் சண்டை ஏ படுகிறது. இளவரசன் தூங்கும்போது அவன் பக்கத்தில் அந்த ரா குமாரியைத் தூக்கி வந்து வைக்கிறது ஒரு பூதம். இளவரச விழித்துக்கொண்டு தன் கை மோதிரத்தை அவள் கையில் அணிவித் விட்டுத் தூங்குகிறுன். அதேபோல ராஜகுமாரி எழுந்து தன் ஒ மோதிரத்தை அவன் கையில் போட்டுவிட்டுத் தூங்கிவிடுகிறுவ பொழுது விடிந்தால் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள சீனத்தீவி அவள் இருக்கிறுள். இருவருக்கும் அவர்கள் யார் யார் என்பதும் தெ யாது. கதையின் வேகம் ஆரம்பத்திலேயே உங்கள் உள்ளத்தை கவர்ந்துவிடும். கடைசியில் அவர்கள் யார், எப்படிச் சந்திக்கிறுர்கள் அவர்களுக்கு என்ன நேருகிறது என்பதையெல்லாம் படித்து முடிக்குப் வரையில் உங்கள் ஆவல் அடங்காது. அழகான சித்திரங்களாலேயே கதை பின்னப்பட்டிருக்கிறது.

விலை **5** அணு

★ **தூங்கும் அழகி** - கதை: ஆர்வி - சித்திரம்: ஸாமி

ராஜாவுக்கு வெகுநாளாகக் குழந்தை இல்லையே என்று வருத்தம். கடைசியில் ஒரு மகானுடைய அருளால் ஓர் அழகான பெண் குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தையை ராஜாவுடைய இளைய சகோதரன் மந்திரவாதியின் உதவிகொண்டு காணுமல் அடித்துவிடுகிறுன். பதினாறு வருஷங்களாக அவள் இருக்குமிடத்தையே ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. சாப்பிடும் நேரம் போக மீதி நேரங்களில் தூங்கிச் கொண்டேயிருந்த அந்த அழகியைக் கடைசியில் பாலகன் ஒருவன் மீட்டுக்கொண்டு வருகிறுன். ஜின் தேவதையும் பிரம்ம ராட்சஸனு வருகிற இந்தக் கதை அற்புதச் செயல்கள் நிறைந்த சாகசக் கதை அழகான சித்திரங்கள் நமது கருத்தைக் கவர்கின்றன. இரண்டா பதிப்பு.

விலை **4** அணு

# தயாராகின்றன!

ஆயிரமாயிரம் குழந்தைகளின் பாராட்டைப் பெற்ற அருமையான கதைகள்

★ **லீடர் மணி** - 'ஆர்வி' எழுதியது.

★ **அபாயச் சங்கு** - நீலம் எழுதியது.

**கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு**

விவரங்களுக்கு:

**கலைமகள் காரியாலயம் : : மயிலாப்பூர், சென்னை.**